பக்கங்கள்: பதினான்கு
Registered as a Newspaper
இலவசத்துறைப் படிப்பகம்
# உதயன்
விலை ரூபா 8.00
www.uthayan.com
சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 17 புதன்கிழமை (03-09-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:279

### மதகுருவின் முறைப்பாடு குறித்த விசாரணை

# யாழ். சிறையில் வைத்தால் உயிராபத்து; இளைஞர் பிணையில் செல்ல அனுமதி!

## நீதிமன்றம் வழங்கியது

யாழ்ப்பாணம்,செப்.3

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட சமயும் தாக்குதலுக்கு இலக்கானார் எனக் கூறப்படும் இளைஞனை மீண்டும் சிறைச்சாலைக்கு அனுப்பி அவருக்கு உயிராபத்தை ஏற்படுத்தாதீர் என அவரது சட்டத்தரணி கோரினார். இதை ஏற்று அந்த இளைஞனை பிணையில் செல்ல யாழ். நீதிவான் அனுமதித்தார்.

யாழ். சென்.ஜூல்ஸ் தேவாலய பங்குத் தந்தையான வண பிதா பி.எம். இம்மானுவேல் யாழ்.பொலீஸில் செய்த முறைப்பாடு ஒன்று தொடர்பான விசாரணை யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் நேற்று இடம்பெற்றது.

யாழ். கோவில் வீதியைச் சேர்ந்த டி.ச.ஏ.ஜெயக்குமார் என்ற இளைஞன்

(14ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். கோயில் வீதி வன்முறைகள்: 7 இளைஞர்கள் நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம்,செப்.3

யாழ். கோயில் வீதியில் நேற்று முன்தினம் இரவு 10மணியளவில் இளைஞர் குழு ஒன்று வீடுகளின் கண்ணாடிகளை உடைத்து அட்டகாசம் புரிந்த சம்பவம் தொடர்பாக சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட ஏழு இளைஞர்களையும் இன்றுவரை விளக்கமறியலில் வைக்கும்படி யாழ். நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா உத்தரவிட்டார்.

யாழ். கோயில் வீதிப் பகுதியில் கலவரம் ஏற்படுத்தியதாகவும் -

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வெளிநாட்டுப் பெண் பிரதிநிதியின் மூக்குக் கண்ணாடியை உடைத்ததாகவும் - குற்றஞ்சாட்டி பிரஸ்தாப நபர்களை யாழ். நீதிவான் முன் பொலீஸார் ஆஜர்செய்தனர்.

இதனையடுத்து, நீதிவான் பிரஸ்தாப இளைஞர்களை இன்றுவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார். (ஓ-3-8)

# கொழும்பு - இந்திய கப்பல் சேவை கேரளத்து கொச்சின் நகருடன்!

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தகவல்

கொழும்பு,செப்.3

கொழும்புக்கும் தூத்துக்குடிக்குமிடையில் ஆரம்பிக்கப்படவிருந்த பயணிகள் கப்பல் சேவைக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார். இதனால் இக் கப்பல் சேவையை கொழும்புக்கும் கேரளாவிலுள்ள கொச்சின் துறைமுகத்துக்குமிடையே ஆரம்பிப்பது பற்றி இப்பொழுது பேச்சு நடத்தப்படுகிறது என்று அரசியல் விவகார, கைத்தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறுகிறார்.

கொழும்பு - கொச்சின் கப்பல் சேவையை ஆரம்பிக்கும் திட்டத்துக்கு கேரள மாநில அரசு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை எனவும் அமைச்சர் பீரிஸ்

(14ஆம் பக்கம் பார்க்க)

# அகாஸி மீண்டும் இலங்கை வருகிறார்

இலங்கைக்கான ஜப்பானின் விசேட சமாதான தூதுவர் யசூசி அகாஸி அடுத்த வாரத்தில் இலங்கைக்கு வரவிருக்கிறார். அரசுக்கும் புலிகளுக்குமிடையில் மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவது தொடர்பாக முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ளவே அவர் இங்கு வருகிறார்.

இலங்கை வருவதற்கு முன் நோர்வே சமாதான அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்மை அவர் லண்டனில் சந்திக்கவிருக்கிறார்.

# நோர்வே தூதர்- பிரதமர் பேச்சு

கொழும்பு,செப்.3

சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை குறித்து நோர்வே தூதர் ஹரன்ஸ் பிரட்ரீசர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்று மாலை கலந்துரையாடியுள்ளார்.

பிரதமருடன் நோர்வே தூதர் சமாதான நடவடிக்கைகளின் அடுத்தகட்ட நகர்வு குறித்தும் - முன்னெடுக்கப்பட வேண்டிய திட்டங்கள் குறித்தும் ஆராய்ந்ததாகத் தெரியவந்தது. (ஓ-3)

### இடைக்கால நிர்வாக சபை பற்றிய

# புலிகளின் திட்ட வரைவு 3 வாரத்தினுள் அரசிடம்!

## சுவிஸில் சு.ப.தமிழ்ச்செல்வன் தகவல்



**சூரிச்,செப்ரெம்பர்3**

**பிரான்ஸ் மற்றும் சுவிஸ்"க்குப் பயணம் மேற்கொண்டுள்ள - அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான - விடுதலைப் புலிகளின் குழு இன்று நாடு திரும்புகின்றது. வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பரீஸில் பிற சட்ட அறிஞர்களுடன் ஆலோசனை நடத்தி, தான் தயாரித்திருக்கும் திட்ட வரைவை இக்குழு, நாடு திரும்பியதும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கும்.**

**அதன் பின்னர் - அடுத்த மூன்று வார காலத்தினுள் - நோர்வே தரப்பு ஊடாக இத்திட்ட வரைவை இலங்கை அரசுக்குச் சமர்ப்பிக்கக் கூடியதாக இருக்கும்.**

**இத்தகவலை சு.ப. தமிழ்ச்செல்வனே சுவிஸில் வைத்து வெளியிட்டார்.**

சுவிஸில் வைத்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் சட்டவல்லுநர்களை ஒன்றிணைத்து இடைக்கால நிர்வாக வரைவு தொடர்பான நீண்ட கலந்துரையாடல் ஒன்றை நடத்தி - ஓர் ஆரம்ப வரைவை நாங்கள் தயாரித்துள்ளோம். எமது தலைமைப்பீடத்தின் பணிப்புரைக்கு ஏற்ப இந்த வரைவை ஆக்கபூர்வமானதாகவும் மக்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய வகையிலும் நாங்கள் உரு

(14ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா.சபையின் அமர்வில் கலந்துகொள்வதில் ஜனாதிபதிக்கும் அரசுக்கும் இடையில் முறுகல்

கொழும்பு,செப்.3

ஐநா. சபையின் அமர்வொன்றுக்கு சமுகமளிப்பது தொடர்பாக ஜனாதிபதிக்கும், அரசுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

ஐ.நா. சபையில் எதிர்வரும் 22 ஆம் திகதி எயிட்ஸ் நோய் தொடர்பான அமர்வொன்று இடம்பெறவுள்ளது. இதில் இலங்கை சார்பாக வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ கலந்துகொள்ளவிருந்தார். ஆனால், இந்த அமர்வில் தான் கலந்துகொள்ளப் போவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்துள்ளார். இது தொடர்பாக ஐநா. செயலாளருக்கும் அறிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்ததாவது:-

இந்த அமர்வில் நான் கலந்து கொள்ளவிருந்தபோதும் தான் கலந்து கொள்ளப்போவதாக ஜனாதிபதி பத்து நாள்களுக்கு முன்னர் தமது

(14ஆம் பக்கம் பார்க்க)

# பெண் மீது பலாத்கார முயற்சி; வவுனியாவில் சிப்பாய் கைது!

வவுனியா,செப்.3

வவுனியா, ஓமந்தை, அரச முறிப்புப் பகுதியில் மீளக்குடியமர்ந்த பெண் ஒருவர் மீது பாலியல் பலாத்காரம் புரிய முயற்சித்ததாகக் கூறப்படும் சிப்பாய் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 5.30 மணியளவில் குறிப்பிட்ட பெண்ணின் வீட்டுக்குச் சென்ற பிரஸ்தாப சிப்பாய் அப்பெண் மீது பாலியல் பலாத்காரம் புரிய முயற்சித்ததாகக் கூறப்பட்டது.

இதுகுறித்து அப்பகுதி மக்கள் வவுனியா அரச அதிபருக்கு முறையிட்டனர். இந்த விடயத்தை அரச அதிபர் படை அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். இதனைத் தொடர்ந்தே அந்தச் சிப்பாய்

(14ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் பரீஸ் மாநாட்டு ஆலோசனைகளை அரசு ஏற்றுவிட்டதாகவே கருதவேண்டியுள்ளது!



## சுதந்திரக்கட்சி மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு,செப்.3

பரீஸில் புலிகள் தயாரித்துள்ள - இடைக்கால நிர்வாக சபை தொடர்பான யோசனையை ஐக்கிய தேசியக் கட்சி அரசு ஏற்றுக்கொண்டுவிட்டதாகவே கருதவேண்டியுள்ளது. அரசு புலிகளைப் பாதுகாக்க வேண்டிய அவசியமில்லை. பொதுமக்களையே பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளது.

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 52 ஆவது வருடாந்த மாநாடு நேற்று குருநாகலில் நடைபெற்றது. ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

அங்கு ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

மக்களைப் பாதுகாக்கும் கடமையில் இருந்து அரசு தவறியுள்ளது. இந்தச் சூழ்நிலையில், புதிய அரசு ஒன்றை அமைப்பது எனது பிரதான இலக்கு இல்லை. ஆனால், புலிகளால தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அற்ற நிலைமையை சீராக்குவதே எனது பிரதான கடமை.

(14ஆம் பக்கம் பார்க்க)

NSB

## அவசரமாக காசு தேவைப்படுகின்றதா?

இப்போது தேசிய சேமிப்பு வங்கியின் ரன் சஹன அடகுச்சேவை



- ஒரு தங்க சவரனுக்கு கூடுதலான பணம்
- இரகசியம் பேணல் மற்றும் துரித சேவை
- தவணை அடிப்படையில் திரும்ப செலுத்தும் வசதி
- வருடாந்தம் 17% குறைந்த வட்டி
- கணனி மூலம் பரிசோதனை

NSB
தேசிய சேமிப்பு வங்கியின் தங்கமான சலுகை

### தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள

# யாழ். மீனவரது படகுகளின் விவரம் திரட்ட நடவடிக்கை!

யாழ்ப்பாணம்,செப்.3

பல்வேறு காரணங்களால் தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ். மீனவர்களின் படகுகள் தொடர்பான விவரங்களை கடற்றொழில் திணைக்கள யாழ். அலுவலகம் கோரியுள்ளது.

தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ். மீனவர்களின் படகுகளை மீளப்பெறுவதற்கு யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் நடவடிக்கை எடுத்துள்ளதையடுத்தே மேற்படி விவரங்கள் திரட்டப்படுகின்றன.

யாழ் செயலகத்தில் நேற்று நடந்த திணைக்களத் தலைவர்களின் கூட்டத்தில் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் இது தொடர்பாக சுட்டிக்காட்டியதை அடுத்தே அரச அதிபர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

கடந்த காலங்களில் குடாநாட்டில் இருந்து அகதிகளாகச் சென்ற மீனவர்களின் படகுகள் இராமேஸ்வரத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றை மீனவர்கள் மீளப்பெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கடற்றொழில திணைக்கள அதிகாரிகள் கோரினர்.

தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள படகுகள் தொடர்பான விவரங்களைச் சமர்ப்பிக்கும்படி அரச அதிபர், அவர்களிடம் கோரியுள்ளார்.

இதனையடுத்து தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள படகுகள் தொடர்பான விவரங்களை உடன் தமது அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு கடற்றொழில் திணைக்கள யாழ். அலுவலக அதிகாரி மீனவர்களிடம் கோரியுள்ளார். (ஒ-3)

# நீதிவானை அவமதித்தவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 3 மாதச் சிறை!

யாழ்ப்பாணம்,செப்.3

மதுபோதையில் யாழ். நீதிவானின் காரை வழிமறித்து அவதூறாகப் பேசிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நால்வருக்கு யாழ். நீதிமன்றம் 5 வருடகாலத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 3 மாத கடூழிய சிறைத தண்டனையும், தலா 2 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்துள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று யாழ். நீதிமன்றில் மேலதிக மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது சந்தேக நபர்கள் நால்வரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவர்களுக்கு இத்தண்டனை விதிக்கப்பட்டது.

# பொலீஸ் படையில் இணைவதை தமிழ் இளைஞர் நிறுத்தவேண்டும்

## அம்பாறை மாவட்டப் புலிகள் துண்டுப் பிரசுரம்

நிந்தவூர்,செப்.3

தமிழ் இளைஞர்களை இலங்கை அரசின் பொலீஸ் படையில் சேர வேண்டாம் என்று கோரும் வகையிலான இரு துண்டுப்பிரசுரங்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல் துறையின் பெயரோடு நேற்று கிழக்கிலங்கையில் பரவலாக விநியோகிக்கப்பட்டன.

தமிழீழ இளைஞர்களே! என்ற தலைப்பில் வெளியான முதலாவது துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எமது இனத்தின் விடுதலைப் போராட்டம் பலம் அடைந்து, உலகமே வியக்கும் இராணுவ சக்தியாக சர்வதேச அரங்கில் தமிழர் தம் உரிமைதனை தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதிநிதித்துவப்படுத்தும் இவ்வேளை, தமிழ் இளைஞர்களில் ஒரு சிலர் சிங்களப் பொலீஸ் படையில் இணைவது வேதனைக்குரிய விடயமாகும்.

தமிழ் இளைஞர்கள் சிங்களப்படையில் இணைய வேண்டாம் என நாம் முன்னர் அறிவித்திருந்தோம். அதனையும் மீறி இணைவதென்பது எமது விடுதலைப் போராட்டத்தை புரிந்துகொள்ளாத் தன்மையை புலப்படுத்தும் என்பதால் சிங்களப்பொலீஸ் படையில் இணைவதனை உடன் நிறுத்தவேண்டும் - என்று உள்ளது.

தமிழ் பேசும் இளைஞர்கள் பொலீஸ் படையில் சேர்வது தொடர்பாக விழிப்படையுங்கள்! என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட இரண்டாவது பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

முஸ்லிம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொலீஸ் சேமப்படையில் சேர்க்கப்படும் தமிழ்பேசும் இளைஞர்கள் தொடர்பாக முஸ்லிம் புத்திஜீவிகளும் கல்விமான்களும் முதலீட்டாளர்களும் தெளிவாகவும் தூரநோக்குடனும் சிந்திக்கவேண்டிய காலமிது. எமது தமிழ்பேசும் மக்களின் தாயகப் பிரதேசத்திலும் தமிழ்பேசும் மக்கள் வாழ்ந்த இடங்களிலும் காட்டுமிராண்டிதனமாக நடத்தப்பட்ட படுகொலைகளே எமது தாயகம் முழுவதும் விடுதலைப்போராட்ட தீச்சுவாலை வேகமாகப் பரவ காரணமாயிருந்தன. ஒரு நாட்டில் சமாந்தரமான இரண்டு படையினர் என்ற நிலை வந்திருக்கிறது.

எம்மினங்களுக்குள் பேரினவாத அரசு நன்கு திட்டமிட்டு முரண்பாடுகளை உருவாக்கியது. இதனை விளங்கிக் கொள்ளாது நாம் பல துன்பவியல் சம்பவங்களுக்கு ஆளாகிப்போனோம் அதை அவர்கள் வேடிக்கை பார்த்தார்கள்.

இன்று சர்வதேச மத்தியஸ்தத்துடன் இன்றைய உலக ஒழுங்குக்கு அமைய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதனை நன்கு உணராத முஸ்லிம் அரசியல்வாதிகளும் அவர்களுடன் துணைபோகின்ற தீய சக்திகளும் தொடர்பாக நீங்கள் அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும்.

நாம் என்றும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பிற்கு பொறுப்பாக இருப்போம் என்பதை நீங்கள் உறுதியாக நம்புங்கள்.

எனவே, பொலீஸ் சேமப்படையில் இணைவதை நீங்கள் உடன் நிறுத்த வேண்டும் அல்லது யுத்தம் மீண்டும் வந்தால் நீங்கள் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானவர்களாகி விடுவீர்கள். உங்கள் நிலையன்று பரிதாபகரமானது என்பதை வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறோம் - என்று உள்ளது.

### யாழ். மாவட்ட மக்களுக்கான

# சுகாதார சேவையை சீராக்க உலக வங்கி உதவிட வேண்டும்!

### யாழ். அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.3

தெற்காசியாவிலேயே அடிப்படைச சுகாதாரச் சேவைகள் யாழ். மாவட்ட மக்களுக்கு போதியளவு முன்னர் வழங்கப்பட்டிருந்தன. ஆனால், யுத்தம் காரணமாக அந்தச் சேவைகள் சீர்குலைந்துள்ளன. மீளவும் அந்தச் சேவை சீராக உலகவங்கி உதவ வேண்டும் என்று யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் கோரியுள்ளார்.

'தெற்காசிய மக்களின் அடிப்படை சுகாதார சேவைகள்' என்ற தலைப்பில் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் காலியில் நடந்த செயலமர்வில பேசுகையிலேயே அரச அதிபர் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

உலக வங்கியின் ஏற்பாட்டில் நடந்த இந்தச் செயலமர்வில் இலங்கை அதிகாரிகளுடன், இந்தியா, பங்களாதேஷ் அரசுகளின் அதிகாரிகளும் பங்குபற்றினர்.

மக்களின் அடிப்படைச் சுகாதாரச் சேவைகளைச் சீராக்குவது தொடர்பாக இச்செயலமர்வில் விரிவாக ஆராயப்பட்டது.

இச்செயலமர்வில் இறுதிநாள் நிகழ்வில் யாழ். மாவட்டத்தின் பிரச்சினை குறித்து கருத்துத் தெரிவிக்க யாழ். அரச அதிபருக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

அப்போது அங்கு உரையாற்றிய அரச அதிபர் கூறியதாவது:-

தெற்காசிய நாடுகளில் நிலவும் அடிப்படைச் சுகாதாரப் பிரச்சினைகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் இல்லை. திறந்த வெளிகளில் இயற்கைக் கடன்களை பொதுமக்கள் கழிக்கும் பழக்கம் இந்தியா மற்றும் பங்களாதேஷில் பெருமளவில் உள்ளது. ஆனால், யாழ். மக்கள் கலாசாரம், மதம் ஆகியவற்றில் கொண்டுள்ள ஈடுபாடு காரணமாக அத்தகைய பழக்கம் யாழ். மண்ணில் கிடையாது. அதனால் அடிப்படைச் சுகாதாரப் பிரச்சினை இங்கு பெரிதாக இல்லை.

இதேவேளை,

கடந்த கால யுத்தம் காரணமாக இங்கு சுகாதார சேவை சீர்குலைந்துள்ளது. அச்சேவையை சீராக்க வேண்டிய பாரிய பொறுப்பு இப்போது எம்மீது சுமத்தப்பட்டுள்ளது. உலக வங்கி இதற்கு உதவவேண்டும் - என்றார் அரச அதிபர். (ஒ-3)

### பிரிட்டிஷ் 'விஸா' கோருபவரிடம்

# விரல்ரேகை பதிவு செய்வதை அரசு அங்கீகரித்துள்ளதா?

### அமைச்சிடம் உயர்நீதிமன்றம் கேள்வி

கொழும்பு,செப்.3

பிரிட்டனுக்கு செல்வதற்கு விசா கோரும் இலங்கையர்களின் கைவிரல் அடையாளங்கள் பிரிட்டிஷ் தூதரகத்தால் பெறப்படுவதற்கான அங்கீகாரத்தை இலங்கை அரசு வழங்கியுள்ளதா என்பது பற்றி உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

பிரிட்டனுக்கு செல்லும் இலங்கையர்கள் விசாவிற்கு விண்ணப்பிக்கும்போது அவர்களது விரல் அடையாளங்கள் பெறும் நடைமுறைக்கு இலங்கை அரசு அனுமதி வழங்கியுள்ளதா என்பது பற்றி தெரியப்படுத்துமாறு வெளிவிவகார அமைச்சரை உயர்நீதிமன்றம் பணித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சமரவீர, அவரது செயலாளர் ஆகியோர் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல்மனுவை பரிசீலனை செய்த உயர்நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யும் பிரிட்டிஷ் அரசின் புதிய நடைமுறையால் இலங்கையர்களின் கௌரவம் பாதுகாக்கப்படுமா? மற்றும் அவர்கள் நியாயமான முறையில் நடத்தப்படுவார்களா? என்பவை குறித்து நீதிமன்றத்திற்கு உத்தரவாதமளிக்க முடியுமா என்பது பற்றியும் அறிவிக்குமாறு வெளிவிவகார அமைச்சருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. சட்டவிரோதக் குடியேற்றங்களைத் தடுப்பதற்காக இந்த நடைமுறையை பிரிட்டிஷ் அரசு அமுல் செய்திருப்பதாக சட்டமா அதிபர் சாரபில் மன்றில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சலீம் மஹ்ரூப் தெரிவித்தார்.

இலங்கையின் உயர்நீதிமன்றம் பிரிட்டிஷ் அரசின் விவகாரங்களில் தலையிடு செய்யும் நிலைப்பாட்டைக கொண்டிருக்கவில்லை என்று பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா கூறியுள்ளார். ஆயினும், இலங்கை அரசு இந்த நடைமுறைக்கு அங்கீகாரம் வழங்கியிருக்கிறதா என்பது கவனிக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதி மீண்டும் இடம்பெறும். (ஒ-5-9)

# ருத்திரகுமாரனின் பரீஸ் பேச்சுக்களில் அமெரிக்க அரசு சம்பந்தப்படவில்லை

### அனுமதியும் வழங்கவில்லை என்கிறார் முன்னாள் தூதுவர்

கொழும்பு,செப்.3

விடுதலைப் புலிகள் பரீஸில் நடத்திய பேச்சுக்களில் அமெரிக்கா பங்குபெறவில்லை. அப்பேச்சுக்களில் புலிகளின் அரசியல் சட்ட நிபுணரும் அமெரிக்கப் பிரஜையுமான வி.ருத்திரகுமாரன பங்குபற்றியதிலும் அமெரிக்கா சம்பந்தப்படவில்லை.

இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவரும் வாஷிங்டனிலுள்ள கேந்திர, சர்வதேச கற்கைகளுக்கான நிலையத்தின் தெற்காசியப்பணிப்பாளருமான டெரசிற்றா ஷாப்பர் தெரிவித்திருக்கிறார்.

அப்பேச்சுக்களில் வி.ருத்திரகுமாரன் பங்குபற்ற அமெரிக்கா அனுமதி வழங்கவுமில்லை. அவர் அனுமதி கோரவுமில்லை எனத் தெரிவித்திருக்கும் முன்னாள் தூதுவர் மேலும் கூறுகையில், அமெரிக்க அரசு அதிகாரிகள் கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் ருத்திர குமாரனுடனும் புலிகளின் ஏனைய பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்தியிருக்கின்றனர்.

விடுதலைப் புலி உறுப்பினர்களுடன் அதிகாரிகள் பேச்சு நடத்துவதை அமெரிக்கச் சட்டம் தடுக்கவில்லை. ஏனைய நாடுகளின் ராஜதந்திரிகள் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருக்கின்றனர். விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு பேச்சு நடத்திவரும் ஒரு நேரத்தில், சமாதான முயற்சிகளுக்கு உதவ விரும்பும் நாடுகள் விடுதலைப் புலிகளுடனும் தொடர்பு வைத்திருப்பது விவேகமானதாகும் - என்றார்.

# சுகாதாரசேவை அலுவலர்களின் போராட்டம் இடைநிறுத்தம்

சுகாதாரச் சேவை பணியாளர்கள் இன்றும் நாளையும் மேற்கொள்ள விருந்த சுகவீனலீவுப் போராட்டம் இடைநிறுத்தப்பட்டிருக்கிறது.

சுகாதாரச் சேவையிலுள்ள சம்பள முரண்பாடுகளுக்கு நிரந்தரத் தீர்வு பெற்றுத்தர 14நாள் கால அவகாசம் வழங்குமாறு அமைச்சரவை உபகுழுவின் உறுப்பினரான அமைச்சர் ராஜித சேனாரத்ன விடுத்த கோரிக்கையை அடுத்தே போராட்டம் இடைநிறுத்தப்பட்டது.

சுகாதாரச் சேவை பணியாளர் சங்கத்துடன் அமைச்சர் சேனாரத்ன நேற்றுமுன்தினம் இரவு பேச்சு நடத்தினார். (ஒ)

### எரிபொருள் விலைகள் மீண்டும் உயரலாம்!

கொழும்பு,செப்.3

உலகச் சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்திருப்பதால் இங்கு எரிபொருள்களின் விலைகள் விரைவில் அதிகரிக்கப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைவர் தஹறும்விமலசேன தெரிவித்திருக்கிறார்.

அரசுக்கும் கூட்டுத்தாபனத்துக்கும் இடையிலான ஒப்பந்தத்தின்படி ஒரு தடவையில் ஒரு லீற்றர் எரிபொருளின் விலையை ஆகக்கூடுதலாக 2ரூபாவால் மட்டுமே அதிகரிக்க முடியும்.

எரிபொருளின் விலையை அதிகரிப்பது குறித்து அரசே இறுதி முடிவு செய்யும் எனவும் கூட்டுத்தாபன தலைவர் கூறுகிறார்.

# பொலீஸாருக்கு எதிராக சுமார் 1000 முறைப்பாடுகள்

### ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு,செப்.3

இதுவரையில் பொலீஸாருக்கு எதிராகப் பொதுமக்களிடமிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள கிடைக்கப்பெற்றுள்ளதாகப் பொலீஸ ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மேலும் அந்த முறைப்பாடுகளில் அனேகமானவை அடிப்படையற்றவை எனப் பொலீஸ் ஆணைக்குழுவின் செயலாளர் பந்துல விஜேரதன தெரிவித்தார்.

எவ்வாறாயினும் மேற்படி முறைப்பாடுகள் தொடர்பில் பொதுமக்கள் பாதிக்கப்படாதும் பொலீஸாரின் செயற்பாடுகளுக்கு இடர்பாடு ஏற்படாதும் தாம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் பொலீஸ் ஆணைக்குழு சம்பந்தமான செயற்பாடுகளை மக்களுக்கு விளக்குவதற்கான நடவடிக்கைகளையும் தாம் மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

### பணம் மற்றும் நகைகளுக்காக

# தாயைக் கொன்ற நபருக்கு 25 வருடங்கள் சிறைத்தண்டனை!

### பாணந்துறை நீதிமன்றம் விதித்தது

கொழும்பு,செப்.3

நகைகள் மற்றும் பணத்துக்காக பெற்ற தாயாரை, கழுத்தை நெரித்து கொன்ற மகனுக்கு 25 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இங்கிரிய றைகம் தோட்டத்தைச் சேர்ந்த சடையன் நல்லம்மா என்னும் 70 வயது மூதாட்டியை, கைகள மற்றும் கால்களைக் கயிற்றினால் பிணைத்து சேலை மற்றும் கயிறு கொண்டு அவரின் கழுத்தை இறுக்கி கொன்றதாக அவரது மகனான லாசரஸ் கேசரத்தினம் என்பவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இந்தக் கொலைச் சம்பவம் 1996 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்றது. இந்த வழக்கிலேயே பாணந்துறை மேல் நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு 25 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

வீடு கட்டுவதற்காக தாயாரான நல்லம்மாவிடம் லாசரஸ் பணம் கேட்டுள்ளார். ஆனால், பணம் தர தாயார் மறுத்துவிட்டார். இதனால் கோபமுற்ற அவர் தாயாரைக் கொலை செய்தார். பின்னர் தாயாரிடமிருந்த பணம், மற்றும் நகைகளை அபகரித்துச் சென்றுள்ளார். மேற்படி சம்பவம் தொடர்பான வழக்கை விசாரித்த பாணந்துறை மேல் நீதிமன்றம், பணம், நகைகள் அபகரித்தமைக்காக 7 ஆண்டுகளும், கொலைக் குற்றத்துக்காக 18 ஆண்டுகளுமாக மொத்தம் 25 ஆண்டுகள் சிறைத்தண்டனையை லாசரஸ் கேசரத்தினத்துக்கு விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. (ஒ)



இஸ்ரேலிய ஹெலித் தாக்குதலில் பற்றி எரியும் கார் ஒன்றைத் தாண்டி ஓடும் பலஸ்தீனர்கள். இந்தத் தாக்குதலில் பலஸ்தீன ஆயுதக் குழு ஒன்றின் மூத்த உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார்.

# அபாச்சி ரக ஹெலிகளின் தாக்குதலில் காஸாவில் இருவர் பலி; 17 பேர் காயம்!

காஸா,செப்.3

இஸ்ரேலின் அபாச்சி ஹெலிகள் காஸா வீதியில் நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களில் ஹமாஸ் உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார்; பதினேழு பேர் காயமடைந்தனர்.

ஹமாஸ் உறுப்பினர்கள் சென்று கொண்டிருந்த கார் ஒன்றை இலக்கு வைத்தே மேற்படி தாக்குதல்கள் இடம் பெற்றன. காரில் பயணித்த ஹமாஸ் உறுப்பினர்களில் ஒருவர் கொல்லப் பட்டபோதும், இருவர் தப்பியோடியுள்ளனர். காயமடைந்தவர்களில் நான்கு சிறுவர்களும் ஒரு பெண்ணும் உள்ளடங்குவர்.

சுமார் ஏழு வாரங்கள் நீடித்த யுத்தநிறுத்தம் கடந்த ஓகஸ்ட் 19 ஆம் திகதி ஜெருசலேமில் நடந்த பஸ் குண்டுத் தாக்குதலுடன் முடிவடைந்த பின்னர் இஸ்ரேல் நடத்திய ஆறாவது தாக்குதல் இதுவாகும்.

இதேவேளை -

ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவுக கொள்கைத் தலைவர் செலானா இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷெரோனை சந்திக்க முயற்சி செய்து வருகின்ற போதும் தனது உடல் நிலையைக் காரணம் காட்டி அவரை சந்திக்க ஷெரோன் மறுத்து வருகிறார்.

அமெரிக்க, ஐநா., பிரிட்டன் போன்றன கூட்டாக முன்னெடுக்கும் சமாதானத்திட்டத்தை அதிகரித்து வரும் வன முறைகள் முறியடித்து விடலாம் என்பதால் இஸ்ரேலிய பலஸ்தீன நிர்வாகத்தை சந்தித்து பேச்சு நடத்தவென செபனா அனுப்பப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே -

பலஸ்தீன பிரதமர் மஹமுட் அப்பாஸுக்கும் அரபாத்துக்கும் இடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் அதிகரித்து வருகின்றன என்று பலஸ்தீன நாடாளுமன்ற சபாநாயகர் அஹமத் கோரி உறுதி செய்திருக்கிறார். (ம)

# உகண்டாவில் 39 சிவிலியன்கள் கொடூரமாக வெட்டிக் கொலை!

கம்பாலா,செப்.3

உகண்டாவின் வட கிழக்குப் பகுதியில் கடந்த மூன்று நாள்களில் 39 சிவிலியன்கள் கொடூரமாக வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்.

எல்.ஆர்.ஏ. என்ற கிளர்ச்சிப் படையினரே இந்தக் கொடூரத்தைச் செய்தனர் என்று உகண்டா இராணுவம் கூறியிருக்கிறது.

நேற்றுமுன்தினம் தலைநகர் கம்பாலாவில் இருந்து 300 கி.மீ.தூரத்தில் சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ்ஸை வழிமறித்து கிளர்ச்சியாளர்கள், அதிலிருந்த 25 பயணிகளை கண்டதுண்டமாக வெட்டினர். குற்றுயிராகத் துடித்தவர்களை பொல்லுகளால் அடித்தும், துப்பாக்கியால் சுட்டும் கொன்றுள்ளனர்.

உலக அரங்கில்

இந்த பஸ்ஸில் பயணித்த ரோமன் கத்தோலிக்க மதகுரு ஒருவரும் இதில் கொல்லப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை நடந்த பிறிதொரு சம்பவத்தில், சொரொட்டி என்ற கிராமத்துக்குள் புகுந்த கிளர்ச்சியாளர்கள் 8 பேரை வெட்டிக் கொன்றனர். அங்கிருந்து வெளியேறி அருகிலுள்ள கிராமத்துக்குள் புகுந்த இவர்கள் அங்கே ஆறுபேரைக் கொன்றனர்.

ஜனாதிபதி யோவெரி முசேவெனியின் மதசார்பற்ற அரசைக் கலைத்து வேதாகம அடிப்படையில் அமைந்த ரோமன் கத்தோலிக்க அரசை அமைப்பதற்காக எல்.ஆர்.ஏ. கிளர்ச்சியாளர்கள் 1988 ஆம் ஆண்டு முதல் ஆயுதப் போராட்டம் நடத்தி வருகின்றனர். இவர்களின் அட்டகாசம் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன என்று இராணுவம் தெரிவிக்கிறது.

ஐ.நா.மதிப்பீட்டின்படி, எட்டு லட்சம் பேர் இதுவரை இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க மருத்துவமனை மீது 23 எயிட்ஸ் நோயாளர்கள் வழக்கு

எயிட்ஸ் நோய் தொற்றியுள்ள 23 ஹொங்கொங் நோயாளர்கள் அமெரிக்க மருத்துவமனை ஒன்றுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

உடலில் காயம் ஏற்பட்டால் அந்த இடத்தில் இரத்தம் உறையாமல் வழிந்து கொண்டேயிருக்கும். இவர்கள் அனைவரும் தமது நோயைத் தீர்ப்பதற்காக 1980ஆம் ஆண்டு மேற்படி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றனர். சிகிச்சை முடிவில் இவர்கள் அனைவருக்கும் எயிட்ஸ் நோய் தொற்றிக்கொண்டது.

தங்களுக்கு வழங்கப்பட்ட மருந்துகள், போடப்பட்ட ஊசிகள் என்பவற்றின் மூலமே எயிட்ஸ் கிருமி தொற்றியுள்ளது என்று இவர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இதனால், இது குறித்து அமெரிக்காவிலேயே மேற்படி மருத்துவமனை மீது வழக்குத் தொடர இவர்கள் திட்டமிட்டுள்ளனர். இதற்காக சட்டத்தரணிகள் பலரின் உதவியை இவர்கள் நாடியுள்ளனர். இவர்களின் குற்றச்சாட்டுக் குறித்து கருத்துத் தெரிவிக்கும் மேற்படி மருத்துவமனை டாக்டர்கள் தாம் வழங்கிய மருந்துகளிலோ அல்லது ஏற்றிய ஊசிகளிலோ எயிட்ஸ் கிருமி இருக்கவில்லை என்று கூறியுள்ளனர். (ம)


# ஈராக் பொலீஸ் நிலையத்தில் நேற்று கார் குண்டு வெடிப்பு!

## அமெரிக்கப் படையினர் இருவர் பலி!!

ஈராக்கிலுள்ள பொலீஸ் தலைமையகத்தில் கார் குண்டு வெடித்ததில் நேற்று இரண்டு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர்; பத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

நஜாப் நகரில் அமைந்திருந்த இந்தப் பொலீஸ் நிலையத்தை பாதுகாக்கும் கடமையில் நின்ற அமெரிக்கப் படையினர் இருவரே கொல்லப் பட்டவர்களாவர்.

கடந்த வெள்ளிக்கிழமை கொல்லப்பட்ட அல் - ஹக்கிமின் சடலம் கிராமம் கிராமமாக ஊர்வலமாக காவிச் செல்லப்பட்டு இறுதியில் நஜாப் நகருக்குள் ஊர்வலம் வந்துள்ள நிலையிலேயே மேற்படி குண்டுவெடிப்பு இடம் பெற்றுள்ளது. அதேவேளை, ஈராக்கிய உள்துறை அமைச்சுக் கட்டடம் அமைந்துள்ள பகுதியிலும் குண்டுத்தாக்குதல் சம்பவம் ஒன்று நடந்துள்ளதாக பி.பி.சி.தெரிவித்துள்ளது. (ம)



பக்தாத்தில் உள்ள பொலீஸ் வளாகத்துக்கு வெளியே அமெரிக்கப் படையினர் காவல் நிற்கின்றனர். இந்த வளாகத்தில் நேற்று இடம்பெற்ற கார் குண்டுத் தாக்குதலில் இரு அமெரிக்கப் படையினர் உயிரிழந்தனர்.

# இந்தோனேசிய ஆன்மீகத் தலைவர் இராஜதுரோக வழக்கில் விடுதலை

ஜகார்த்தா,செப்.3

இந்தோனேசிய ஆன்மீகத் தலைவருக்கு எதிராக சுமத்தப்பட்ட இராஜதுரோக குற்றச்சாட்டு மீதான வழக்கு விசாரணையில் இருந்து அவர் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.



அபுபாக்கர் பாஸீர்

65 வயதான அபுபாக்கர் பாஸீர் என்ற இவர் மீது ஜனாதிபதி மேகவதியை கொலை செய்ய முயற்சித்தார் என்றும் -

2000 ஆம் ஆண்டு தேவாலயங்களில் குண்டுகளை வெடிக்க வைத்தார் என்றும் - குற்றஞ்சாட்டப்பட்டது. இந்த குற்றச்சாட்டுக்கள் மீதான விசாரணையில் நேற்று தீர்ப்புக் கூறப்பட்டது.

ஆன்மீகத் தலைவர் மீதான விசாரணை முடிவுகள் நேற்று வெளியாகும் என்பதால் அங்கு தீவிரவாதிகளின் தாக்குதல்கள் நடக்கலாம் என்ற அச்சமும் எழுந்திருந்தது. இதனால், பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் ஆன்மீகத் தலைவர் விடுதலை செய்யப்பட்டார் என்ற தீர்ப்பு வெளியானதும் நீதிமன்றத்துக்கு வெளியே நின்ற நூற்றுக்கணக்கான இளைஞர்கள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தனர்.

இஸ்லாமிய பாரம்பரியத்தை ஊட்டுவதைத் தவிர வேறு எந்தச் குற்றச் செயல்களிலும் தான் ஈடுபடவில்லை என்று கூறியுள்ள இவர், இஸ்லாமிய அரசு ஒன்றை உருவாக்குவதற்காக ஜனாதிபதி மேகவதியை கொலை செய்யச் சாட்டப்பட்டிருந்த குற்றச் சாட்டை அடியோடு மறுத்துள்ளார்.

அமெரிக்காவின் சதிக்கு தான் உள்ளாக்கப்படுகிறேன் என்றும் இவர் கூறியுள்ளார்.

இஸ்ரேலும் அமெரிக்காவும் சான்றுகளைத் திரித்து, இஸ்லாமிய பயங்கரவாதிகளுடன் தன்னை இணைக்கின்றன எனவும், தன்மீதான விசாரணையை ஆண்டவனின் எதிரிகளே குறிப்பாக அமெரிக்கர்களும் இஸ்ரேலியர்களும் நடத்தினர் - எனவும் அவர் கூறியுள்ளார்.

# காதலைக் கண்டுபிடிக்க கணனி மென்பொருள்

காதலைக் கண்டுபிடிக்கும் புதிய கணனி மென்பொருளை இஸ்ரேலிய நிறுவனம் ஒன்று கண்டுபிடித்துள்ளது.

இந்தப் புதிய மென்பொருள், தொலைபேசியில் உரையாடுவோரின் குரலை வைத்து அவர்கள் காதல் உணர்வோடு பேசுகிறாரா?, உண்மையிலேயே அவர் காதல் வசப்பட்டாரா? அல்லது காமலீலைக்கு மட்டும் ஆசை வார்த்தைகளைக் கூறுகிறாரா? என்பதைக் காட்டிக்கொடுத்துவிடும்.

இந்த மென்பொருள் ஒலி அலைகளைப் பதிவு செய்து தொலைபேசியில் உரையாடுபவரின் மனநிலையை கணனித் திரையில் படம் போட்டுக் காட்டிவிடும். புலனாய்வுத் துறையினருக்கு குற்றவாளிகள் உண்மை பேசுகிறார்களா என்பதைக் கண்டுபிடிக்க இந்த மென்பொருள் பெரிதும் உதவும் என்று கூறப்படுகிறது.

# குஜராத் கலவரத்துக்கு பழிவாங்கவே மும்பையில் குண்டுகளை வைத்தோம்!

## கைதான தீவிரவாதிகள் வாக்குமூலம்

குஜராத் கலவரத்துக்கு பழிவாங்கவே மும்பையில் குண்டுகளை வெடிக்க வைத்தோம் என்று கைது செய்யப்பட்டுள்ள தீவிரவாதிகள் பொலீஸாரிடம் கூறியுள்ளனர்.

மும்பையில் கடந்த மாதம் 25 ஆம் திகதி நடந்த தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இக்குண்டு வெடிப்பின் சூத்திரதாரிகள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள இரண்டு பெண்கள் உட்பட நான்கு பேர் இக்குண்டு வெடிப்புக்கு தாங்களே காரணம் என்று வாக்குமூலம் அளித்துள்ளனர். இவர்கள் மீது பொடா சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையே -

காஷ்மீரில் நேற்று தீவிரவாதிகளுக்கும் எல்லைப் பாதுகாப்பு படையினருக்கும் இடையில் நடந்த சண்டையில் ஐந்து தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

வீடொன்றுக்குள் புகுந்திருந்த இவர்களை படையினர் சுற்றிவளைத்துத் தாக்குதல் நடத்தினர் என்று இந்தியப் பாதுகாப்புத்துறை அறிவித்துள்ளது.

மற்றொரு சம்பவத்தில், எல்லை யோரக் காவல் படை முகாம் ஒன்றைத் தகர்க்க முயன்ற தீவிரவாதிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொரு தீவிரவாதி தப்பியோடிவிட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இரவு நடந்த மற்றொரு சம்பவத்தில் காஷ்மீரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேரை தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றுள்ளனர். இரவு நேரம் பார்த்து வீடொன்றுக்குள் நுழைந்த தீவிரவாதிகள் அங்கிருந்த ஐந்து பேரையும் சுட்டுக் கொன்றுள்ளனர் என்று தெரிவிக்கப் படுகிறது.

### லெபனானை அச்சுறுத்தும் பல்லி!

பெய்ரூட்,செப்.3

லெபனான் தலைநகர் பெய்ரூட்டை இராட்சத பல்லி ஒன்று பல வாரங்களாக அச்சுறுத்தி வருகிறது.

10 அடி நீளமும், 126 கிலோ எடையும் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ள இந்தப் பல்லி, குட்டைகளில் திடீரென தோன்றி மறைகிறது. சில வேளைகளில் அது வீதிக்கு வந்து பூனை, நாய்களை விழுங்கிவிடுகிறது. அதுமட்டுமல்லாமல் குதிரை ஒன்றையும் கொன்று தின்றுள்ளது.

இதனால், அங்கு பெரும் பரபரப்பு நிலவுகிறது. ஜேர்மனியர் ஒருவரே இந்த இராட்சத பல்லியை, அது சிறிதாக இருக்கும் போது லெபனானில் கொண்டுவந்து விட்டார் என்று கூறப் படுகிறது.

இந்தப் பல்லியை பிடிக்க பணியில் அமர்த்தப்பட்டுள்ள வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் இதைப்பிடிக்கத் தேவையான சாதனங்கள் தம்மிடம் இல்லை என்று கூறியுள்ளனர்.

# நோர்வே இளவரசியின் சகோதரனுக்குச் சிறை!

ஒஸ்லோ,செப்.3

நோர்வே நாட்டு இளவரசி மெட் மாட்டீன் சகோதரன் ஹொய்பீக்கு அறுபது நாள் சிறைத்தண்டனையும் அபராதத் தொகையும் விதிக்கப்பட்டது.

முன்னாள் காதலியைத் தாக்கி காயப்படுத்திய குற்றச்சாட்டுக்காகவே அவருக்கு இந்தத் தண்டனைத் தீர்ப்பை நீதிமன்றம் விதித்துள்ளது. ஆனால், தனது குற்றத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கும் ஹொய்பி இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யவுள்ளார்.

பட்டத்து இளவரசரை மாட்டீன் திருமணம் செய்த போது அவர்கள் இருவருக்கும் ஆறு வயதில் மகன் ஒருவன் இருந்தான். இதனால் மார்ட்டீன் எதிர்காலத்தில் ராணியாகப் பொறுப்பேற்க முடியுமா? என்ற சர்ச்சையை பத்திரிகைகள் சமீபத்தில் கிளப்பியிருந்தன. தற்போது இளவரசி மீண்டும் கர்ப்பமாக இருக்கின்றார்.

இந்நிலையில் மார்ட்டீனின் சகோதரனுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருப்பது மார்ட்டீன் மீதான சர்ச்சையை பூதாகரமாக்கியிருக்கிறது.

# தமிழர் பிரச்சினைக்கான தீர்வில் புலம்பெயர்ந்தோர் பங்கு அவசியம்

## நோர்வேயில் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு

கொழும்பு,செப்.3

ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளுக்கான அரசியல் தீர்வில் புலம்பெயர்ந்து வாழும் அனைத்து தமிழ் மக்களினதும் பங்களிப்பு அத்தியாவசியமானது.

- இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் நோர்வேயில் வலியுறுத்தியுள்ளார்.

தற்போது நோர்வேயில் தங்கியுள்ள அமைச்சர் சந்திரசேகரன் அங்கு புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களைச் சந்தித்து உரையாடும் போது இவ்வாறு தெரிவித்தார்.

உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ள ஈழத்தமிழர்களின் பிரச்சினையை தமிழீழ விடுதலைப் புலிகள் மாத்திரமே கவனித்துக்கொள்வார்கள் என்று அலட்சியமாக இருந்துவிடாமல் - தமிழர் பிரச்சினைத் தீர்வில் தமக்குள்ள சமூகக் கடமையையுணர்ந்து புலம்பெயர்ந்த தமிழர்கள் வழிகாட்டிகளாக இயங்கவேண்டுமென்று அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

# மாகாணமட்ட கையெழுத்து சஞ்சிகை போட்டியின் முடிவுகள் வெளியாகின

மாணவர்களின் வாசிப்புத் திறனையும் எழுத்தாக்கத் திறனையும் வளர்த்தெடுக்கும் நோக்கில் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்டுவரும் கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டிகளில் கடந்த ஆண்டுக்கான போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் மாகாண மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற பாடசாலைகளின் பெயர், விவரங்கள் வருமாறு:-

**பாலர் கீழ்ப்பிரிவு (தரம் 3,4)**

▲ முதலாம் இடம் - வவுனியா, நெளுக்குளம் கலைமகள் ம.வி. (தளிர்கள்).

▲ இரண்டாம் இடம் - துணுக்காய் அம்பகாமம் அ.த.க.பாடசாலை (பூந்துணர்).

▲ மூன்றாம் இடம் - மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் (மலரும் மொட்டுக்கள்).

**பாலர் மேற்பிரிவு (தரம் 5)**

▲ முதலாம் இடம் - கல்முனை அல் - முனீர் வித்தியாலயம் (உதயம்).

▲ இரண்டாம் இடம் - உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி (மலரும் செல்வங்கள்).

▲ மூன்றாம் இடம் - கிளிநொச்சி, பல்லவராயன்கட்டு இ.த.க. பாடசாலை (ஆரம்).

**இடைநிலைப்பிரிவு -I (தரம் 6,7)**

▲ முதலாம் இடம் - மட்டு. அமிர்தகழி சித்திவிநாயகர் வித்தியாலயம் (வளர்நிலா).

▲ இரண்டாம் இடம் - விசுவமடு பாரதி வித்தியாலயம் (துலங்கல்).

▲ மூன்றாம் இடம் - கல்முனை, மருதமுனை அல் - ஹம்ரா வித்தியாலயம் (வளரும் உள்ளங்கள்).

**இடைநிலைப் பிரிவு -II (தரம் -8,9)**

முதலாம் இடம் - மன்னார், வங்காலை புனித ஆனாஸ் ம.ம.வி. (விழுதுகள்).

▲ இரண்டாம் இடம் - திருகோணமலை சென்.மரிஸ் கல்லூரி (அநந்தம்).

▲ மூன்றாம் இடம் - கல்முனை பதியுதீன் மகமூத் மகளிர் கல்லூரி (வானவில்).

**இடைநிலைப்பிரிவு - III (தரம் 10,11)**

▲ முதலாம் இடம் - மட்டு. புதுக்குடியிருப்பு கண்ணகி ம.வி. (திறவுகோல்).

▲ இரண்டாம் இடம் - முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி (பருவம்).

▲ மூன்றாம் இடம் - கிளிநொச்சி, இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை (கீற்று).

**கல்லூரி நிலைப் பிரிவு (தரம் 12,13)**

▲ முதலாம் இடம் - மட்டு பட்டிருப்பு ம.ம.வி. (ஊக்கி).

▲ இரண்டாம் இடம் - வட்டக்கச்சி ம.வி. (கடல்).

▲ மூன்றாம் இடம் - வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி (நறுமுகை).

இந்தப் பாடசாலைகளுக்குரிய பரிசில்களும் சான்றிதழ்களும் மாகாணக் கல்வி அமைச்சினால் நடத்தப்படவுள்ள தமிழ் இலக்கியப் பெருவிழாவில் வைத்து வழங்கப்படவுள்ளதாக மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

(ம-10)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரத்துவ அன்னை

திருமதி

**பரமேஸ்வரி யோகானந்தசாமி**

பிறப்பு 18.06.1947 — இறப்பு 05.08.2003

மூன்றெழுத்துத் தெய்வமே! - எங்கள்
முத்தான அன்னையே!
மீண்டுவர முடியலையே! - நின்
இழப்பின் துயரிலிருந்து!
ஆண்டவனை வேண்டுகிறார்
நால்பிள்ளைசேர் உறவுகளும்
உங்கள் ஆத்மாவின் சாந்திக்காய்
அவனியிலே அனுதினமும்!

எங்கள் அன்பு அன்னையின் இறுதிக்கிரியைகளில் கலந்தும் தந்தி, தொலைபேசி, கடிதங்கள்மூலம் அனுதாபச் செய்திகள் வழங்கியும் எம்முடனிருந்து எல்லா வகை உதவிகளையும் புரிந்து எங்களுடன் கரம் கோர்த்த அனைவருக்கும் எமது நெஞ்சம்நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (04.09.2003) வியாழக்கிழமை நடைபெறவுள்ள அந்தியேட்டி நிகழ்விலும் தொடர்ந்து எமது இல்லத்தில் நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

(22128) (24-15-19)

# ஜனாதிபதியின் ஒப்புதல் இன்றி உறுப்பினர் நியமனத்தில் தாமதம்

தேர்தல் ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள போதிலும், அதற்கு இன்னும் ஜனாதிபதியின் ஒப்புதல் கிடைக்கவில்லை.

தேர்தல் ஆணைக்குழுவுக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பெயர்ப்பட்டியலை ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு அனுப்பிவைத்துள்ளதாக அரசியல் நிர்ணய சபையின் தலைவர் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.

முன்மொழியப்பட்டுள்ள இந்தப் பெயர்களில் ஒருவரின் சுயாதீனத் தன்மை குறித்து ஜனாதிபதி ஒப்புதல் அளிக்கவில்லை என ஜனாதிபதியின் ஊடகப்பணிப்பாளர் ஜனதாச பீரிஸ் தெரிவித்தார்.

# சமையற்காரப் பெண் தேவை

பருத்தித்துறையில் இயங்கும் பாமதி கருணை இல்லத்திற்கு சமையற்காரப் பெண் ஒருவர் தேவை. வயது 35-50 விரும்பத்தக்கது. இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்றவேண்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: செயலாளர்,
பாமதி கருணை இல்லம்
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(22149) (24-15-19)

---

பல்துறை சார்ந்த சமூக பொதுப்பணிகளைப் பெருமையுடன் நினைவு கூர்ந்து

# உயர்திரு. எஸ்.ஜே.செல்வராஜா ஜே.பி. அவர்களின்

**பிறந்தநாளாம் இந்நாளில் (03.09.2003) பாராட்டிக் கௌரவித்து வாழ்த்துகிறோம்**

**கடந்த இந்த வருடகால சமூக பொதுச்சேவை பங்களிப்புக்களை நினைவு கூருகிறோம்.**

* தலைவர்/இயக்குநர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய்
* தலைவர்/நிர்வாக செயலர் Y.M.C.A. மானிப்பாய்.
* தலைவர், அரச வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம், உடுவில்.
* செயலாளர், கிறீன் வைத்தியசாலை, மானிப்பாய்.
* செயலாளர், பாரதி சனசமூக நிலையம், மானிப்பாய்.
* செயலாளர், மக்லியோட், வைத்தியசாலை, இணுவில்.
* உபதலைவர், வடபிராந்திய கவுன்சில், Y.M.C.A.
* நிறைவேற்றுப் பணிப்பாளர், W.C.D.A. வடமராட்சி
* ஆலோசகர், ஆனந்த விளையாட்டுக்கழகம், மானிப்பாய்.
* நிர்வாக உறுப்பினர், மக்கள் சபை, மானிப்பாய்.
* நிர்வாக உறுப்பினர், கணக்காய்வாளர், வர்த்தக சங்கம், மானிப்பாய்
* பட்டய உறுப்பினர்/காசாளர், லயன்ஸ் கழகம், மானி. வட்டம்.
* திறவுநர், காப்பாளர், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், குடத்தனை.
* செயலாளர், பழைய மாணவர் சங்கம், M.E.S. மானிப்பாய்.
* நிர்வாக உறுப்பினர், அபிவிருத்திச் சங்கம். M.E.S, மானிப்பாய்.
* பொருளாளர், கிராம அபிவிருத்திச் சங்கம், மானிப்பாய்.
* ஆலோசகர், திருக்குடும்ப சனசமூக நிலையம், புதுமடம்.
* ஆதீன பிரதிநிதி, தென்னிந்தியத் திருச்சபை, மானிப்பாய்
* விழா அமைப்பாளர், வ.தெ.மே. முன்பள்ளி ஆசிரியர் சங்கம்
* கவுன்சிலர், தென்னிந்திய திருச் சபை, யாழ். பேராய கவுன்சில்
* சமாதான நீதிவான்



உயர்திரு. எஸ்.ஜே.செல்வராஜா ஜே.பி.
முதலாம் குறுக்கு இணுவில் வீதி, மானிப்பாய்.

**மகளிர் சிறுவர் மேம்பாட்டுத்திட்டத்தின் சமுதாயப் பணியில் பின்வரும் மகளிர் அமைப்புகளில் நிறுவுநர், ஊக்குநர், ஆலோசகராக நினைவு கூருகிறோம்.**

* இன்பநிலா மகளிர் சங்கம் - சத்தியபுரம்
* வெள்ளிநிலா மகளிர் சங்கம் - புதுமடம்
* அன்புநிலா மகளிர் சங்கம் - புதுமடம்
* சரஸ்வதி மகளிர் சங்கம் - சண்டிலிப்பாய்
* கலைமகள் மகளிர் சங்கம் - சண்டிலிப்பாய்
* வான்மதி மகளிர் சங்கம் - சண்டிலிப்பாய்
* கலைவாணி மகளிர் சங்கம் - அளவெட்டி
* திருமகள் மகளிர் சங்கம் - அளவெட்டி
* வெண்மதி மகளிர் சங்கம் - நவாலி
* வளர்மதி மகளிர் சங்கம் - நவாலி
* புதுமலர் மகளிர் சங்கம் - சுழிபுரம்
* பூமகள் மகளிர் சங்கம் - சுழிபுரம்
* வளர்மதி மகளிர் சங்கம் - சுழிபுரம்
* பாரதி மகளிர் சங்கம் - கொக்குவில்
* செந்தமிழ் மகளிர் சங்கம் - கொக்குவில்
* சந்திரமதி மகளிர் சங்கம் - அராலி
* சாதனா மகளிர் சங்கம் - கோப்பாய்
* கடலரசி மகளிர் சங்கம் - பருத்தித்துறை
* மரியன்னை மகளிர் சங்கம் - பருத்தித்துறை
* உதயநிலா மகளிர் சங்கம் - பருத்தித்துறை
* கலைமகள் மகளிர் சங்கம் - வட்டுக்கோட்டை
* வளர்மதி மகளிர் சங்கம் - வட்டுக்கோட்டை
* அலைமகள் மகளிர் சங்கம் - வட்டுக்கோட்டை
* தீபம் மகளிர் சங்கம் - ஆனைக்கோட்டை
* தாரகா மகளிர் சங்கம் - சுதுமலை
* தாரகை மகளிர் சங்கம் - சுதுமலை
* தாரணி மகளிர் சங்கம் - சுதுமலை
* ஒளிநிலா மகளிர் சங்கம் - உடுவில்
* உதயதாரகை மகளிர் சங்கம் - திருவடிநிலை
* வெண்நிலா மகளிர் சங்கம் - திருவடிநிலை
* பராசக்தி மகளிர் சங்கம் - ஊர்காவற்றுறை
* புவசக்தி மகளிர் சங்கம் - சுதுமலை.

**கடந்த இந்தவருடகால பொதுச்சேவையில் முதன்மை செயற்பாட்டுச் சாதனைகளை நினைவுகூருகிறோம்.**

* வடமராட்சி கிழக்கில் முதன்முதலாக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தை உருவாக்கியவர்.
* ஆசிரிய தினத்தில் முதன்முதலாக முன்பள்ளி ஆசிரியர்களை பிரதேச ரீதியாக ஒன்றிணைத்து கௌரவிப்புச் செய்தவர்.
* முதன்முதலாக தென்னிந்திய திருச்சபையில் பகல் பராமரிப்பு (I.R.W.C.D) நிலையங்களை ஒன்றிணைத்து மாவட்ட ரீதியில் சிறுவர் விழா நடத்தியவர்.
* கூட்டுறவில் பணியாளராய் இருந்து முதன்முதல் விடுமுறையில் வெளிநாடு சென்றவரும் பின்னர் கூட்டுறவுத் தலைவரானவரும்.
* வலி.தென்மேற்கு பிரதேசத்தில் எழுபதிற்கும் மேற்பட்ட திருமணப் பதிவற்றோருக்கு திருமணப்பதிவை லயன்ஸ்மூலம் நடத்தியவர்.
* மானிப்பாய் வடகிழக்குப் பகுதியில் முதன்முதலாக ஒரு பொதுக் கட்டடம் நிறவி கூட்டுறவுக் கிளையை மக்கள் சொத்தில் அமைத்த பாரதி சனசமூக நிலைய அந்நேர செயலாளராய் முக்கிய பங்காற்றியவர்.
* பலரின் முயற்சியால் முதன்முதலாக உடுவிலில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தை வைத்தியசாலைக்கான திறப்புவிழாவில் தலைமை வகித்து திறந்து வைத்தவர்.
* வடபிராந்திய மகளிர் ஒன்றிய விழிப்பு சஞ்சிகை வெளியீட்டை தலைமைதாங்கி நடத்தியவர்.
* வடக்கில் முதன்முதலாக மகளிர் சிறுவர் மேம்பாட்டு ஒன்றியம் உருவாக்கியவர்.

மேற்படி பல்துறை சார்ந்த மக்கள் சேவைகளில் மிலேனியத்தின் அதிகூடுதல் அர்ப்பணிப்பு சேவையாளரான உயர்திரு. எஸ்.ஜே.செல்வராஜா அவர்கள் சமூகத் திலகமாக மேன்மேலும் சேவைகள் ஆற்ற இறைவனை இப்பிறந்தநாளில் வேண்டுகிறோம்.

"யாழ். மகளிர் கழகம்"

(22145) (27)

# உதயன்

## சந்திரிகா தந்திரத்துக்கு எடுபடாத பிரதம மந்திரி!

"குறுகிய அரசியல் லாபங்களுக்காக நாட்டின் தேசிய நலனுக்குக் குந்தகம் விளைவித்துவிடக் கூடாது"

ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு இவ்வாறான வகையில் ஆலோசனை வழங்கும் கடிதம் ஒன்றைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனுப்பிவைத்திருக்கின்றார்.

புலிகளின் குரங்குபாஞ்சான் முகாம் தொடர்பாக கடந்த 21ஆம் திகதி ஜனாதிபதி குமாரதுங்க எழுதிய கடிதத்துக்கு கடந்த 28ஆம் திகதி தாம் வரைந்த பதிலிலேயே பிரதமர் இவ்வாறு ஆலோசனை கூறியிருக்கின்றார்.

இப்போதுள்ள நிலையில் அரசியல் ஆதாயம் கருதி நடந்துகொள்வது சரியான வழி அல்ல என்றும் பிரதமர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

திருகோணமலை மாவட்டத்தில் குரங்குபாஞ்சான் பகுதியில் அமைந்துள்ள புலிகளின் முகாம் சர்ச்சைக்குரியதாயிருக்கின்றது.

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் புதிதாக அந்த முகாமைப் புலிகள் அமைத்துள்ளனர் என்பது அரசுப்படைகளின் குற்றச்சாட்டு.

ஆனால், ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு பல வருடங்கள் முன்பிருந்தே அந்த முகாமைத் தாங்கள் பேணி வருவதாகப் புலிகள் திடமாகத் தெரிவித்து வருகின்றார்கள்.

இந்நிலையில், கண்காணிப்புக் குழுவும், அதைத் தொடர்ந்து புலிகளுக்கும் அரசுத்தரப்புக்கும் இடையிலான சமரச நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகச் செயற்படும் நோர்வேத் தரப்பினரும் இந்த முகாம் குறித்த சர்ச்சைக்குத் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தநேரத்தில், இவ்விவகாரத்துக்கு 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்ற பாணியில் நடவடிக்கை எடுக்கும்படி அரசுத் தரப்பைத் தூண்ட முயற்சித்து வருகின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

மிகமோசமான - கொடூரமான - பேரழிவு தருகின்ற - அகோர யுத்தத்தில் ஈடுபட்டிருந்த அரசுப் படைகளும், புலிகள் இயக்கமும் இப்போது யுத்தத்தை நிறுத்தி சமரச நடவடிக்கைகளுக்கு இணங்கி வந்திருக்கின்றன. அமைதி வழியில் - சமாதான நெறியில் - இனப்பிரச்சினைக்கு இணக்கத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு இந்த இருதரப்பினரும் இணங்கியுள்ளனரே தவிர, அவர்களுக்கிடையிலான கருத்து வேறுபாடுகள், கோபதாபங்கள், நம்பிக்கையீனங்கள், முரண்பாடுகள் போன்றவை அகன்றுவிடவில்லை. இருதரப்புமே, ஒன்றையொன்று சந்தேகக் கண்ணோடு பார்த்துக்கொண்டு தான் சமாதான முயற்சி என்ற களத்தில் இறங்கி நிற்கின்றன.

இத்தகைய நிலையில் குரங்குபாஞ்சான் முகாம் போன்ற சர்ச்சைக்குட்படும் விடயங்களை இருதரப்பினரும் எதிர்கொள்வது தவிர்க்க முடியாதது.

சமாதானப் பாதை பஞ்சுமெத்தையல்ல, அதில் முட்களும், தடைகளும் நிறைந்து காணப்படும் என்று இதைத்தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சமாதான முயற்சிகளின் ஆரம்பத்திலேயே தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், இத்தகைய சர்ச்சைக்குரிய விடயங்களை தனது குறுகிய அரசியல் லாபங்களுக்கு ஜனாதிபதி குமாரதுங்க பயன்படுத்த முயல்வது போலத் தென்படுகின்றது.

குரங்குபாஞ்சான் முகாம் விடயத்தைக் காட்டி அது தொடர்பாகப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைக்கு அரசைத் தூண்டி அதன்மூலம் சமாதான முயற்சிகளை அடியோடு குழப்பி, அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி அரசுக்கட்டைக் கைப்பற்றுவது ஜனாதிபதியின் திட்டம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாய் - அப்பட்டமாய் - வெளியே தெரிகின்றது.

"நாட்டின் பூரண பாதுகாப்பைப் பேணும் அதே வேளை, சமாதான முயற்சிகளைத் தொடரும் பொறுப்பையும் நாட்டுமக்கள் இந்த அரசுக்கு வழங்கியிருக்கின்றனர். எனவே, மக்கள் வைத்துள்ள அந்த நம்பிக்கையை நிறைவேற்ற நான் உறுதி பூண்டுள்ளேன்" - என்று தெளிவான பதில் ஒன்றை ஜனாதிபதிக்குக் கொடுத்திருக்கின்றார் பிரதமர்.

சமாதான முயற்சிகளைக் குழப்பும் நோக்கில் ஜனாதிபதி மேற்கொள்ளும் தந்திர நடவடிக்கைகளுக்குத் தாம் பலியாகி விடமாட்டார் என்பதை இந்தப் பதில் மூலம் மீண்டும் ஒருமுறை ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்தியிருக்கின்றார் பிரதமர் ரணில்.

# இந்திய முப்படைப் பிரதிநிதிகள் அடங்கிய குழு கொழும்பு வருகை

கொழும்பு,செப்.3

இலங்கை முப்படைகளுக்கும் தேவையான பயிற்சிகளை மதிப்பீடு செய்வதற்கென இந்தியாவின் முப்படைகளின் பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்று கொழும்பு வந்துள்ளது.

இந்தக் குழுவில் இந்திய முப்படைகளையும் சேர்ந்த பிரதிநிதிகளுடன் பாதுகாப்புப் பிரிவின் விசேட பிரதிநிதிகளும் அடங்கியுள்ளனர்.

திங்கட்கிழமை கொழும்பு வந்துசேர்ந்த அவர்கள் அன்றே இராணுவ பதில் தளபதி லொகான் குணவர்த்தனவைச் சந்தித்துப் பேசினர். அடுத்த சில தினங்களில் அவர்கள் இராணுவ பயிற்சிக் கல்லூரிகளுக்கு விஜயம் செய்து அங்குள்ள தேவைகள் பற்றி மதிப்பீடு செய்வர்.

இலங்கைப் படையினருக்கு பயிற்சிகளை வழங்கும் இந்தியாவின் ஒப்பந்தத்தின் கீழ் இந்த அதிகாரிகளின் விஜயம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் இலங்கை இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுவரும் பயிற்சிகள் ஏற்கனவே அதிகரிக்கப்பட்டுள்ளன.

தற்போது வந்துள்ள இந்திய அதிகாரிகளின் நோக்கம் இலங்கையில் உள்ள படைகளின் பயிற்சி நிலையங்களின் செயற்றிறனை மேலும் அதிகரிப்பது எப்படி என்று ஆராய்வதாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை இந்தியக் குழுவினர் நாடு திரும்பவுள்ளனர்.

(ம)

# இந்தியா - இலங்கை இடையிலான படகு சேவைத்திட்டம் நிறுத்தப்பட்டது

## இந்திய தூதரக வட்டாரம் தகவல்

கொழும்பு,செப்.3

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் எதிர்ப்புக் காரணமாக இந்தியா - இலங்கை இடையிலான படகுச் சேவைக்கான திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்திய தூதரக வட்டாரங்களை மேற்கோள்காட்டி இணையத்தளம் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

படகுச் சேவை தொடர்பான ஒப்பந்தம் இந்த வாரம் கையெழுத்திடப்படுவதாக இருந்தது. அதற்காக இலங்கை வருவதாக இருந்த இந்திய கப்பல்துறை அமைச்சர் சத்துருகன் சின்ஹா இறுதி நேரத்தில் தனது விஜயத்தை ஒத்திவைத்தார் என்றும் இந்திய தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த இந்திய - இலங்கைப் படகுச் சேவைத் திட்டமும் தலைமன்னார் - இராமேஸ்வரம் இடையிலான பாலத் திட்டமும் முன்வைக்கப்பட்டிருந்தன.

தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்த இரு திட்டங்களையும் கடுமையாக எதிர்த்து இந்தியப் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

இதனையடுத்து, இந்த இரு திட்டங்களும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன. தற்போது படகுச் சேவை நிரந்தரமாக நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள்

# கல்வியமைச்சுக்கு எதிராக இன்று மறியல் போராட்டம்

திருகோணமலை,செப்.3

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு எதிரே அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் இன்றுமுதல் மறியல் போராட்டத்தில் குதிக்கின்றனர்.

மாகாணக் கல்வி அமைச்சு அலுவலகம், மாகாண கல்வித் திணைக்களம் ஆகியவற்றுக்கு எதிரே மறியல் நடத்தப்படும் என்றும் - அவை இயங்க அனுமதிக்கப்போவதில்லை என்றும் - பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

முதல் நாள் மறியல் போராட்டத்தில் தீர்க்கமான முடிவு கிட்டாத பட்சத்தில் தமது மறியல் போராட்டம் தொடர்ந்து நடத்தப்படும் என்று சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

தமது போராட்டத்துக்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம், மயோன் முஸ்தபா எம்.பி., தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஆகியோர் பூரண ஆதரவு நல்க உறுதியளித்திருக்கின்றனர் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். முன்னதாக வடக்கு-கிழக்கு மாகாணத்தின் எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி நேற்று முதல் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மூவினத்தையும் சேர்ந்த சுமார் முந்நூறு பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள், மாகாணக் கல்வி அமைச்சு அலுவலகத்தின் முன் இருந்து பொது அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

முக்கியமான 6 அம்சங்களை முன்வைத்து இந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படுகின்றது. இன்னும் சில கோரிக்கைகளுக்குத் தீர்க்கமான முடிவு எட்டப்படாத பட்சத்தில் போராட்டம் தொடரப்படும். அத்துடன் , இன்னும் சில தினங்களில் வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மூவின நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊடாக அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வண்ணம் போராட்டம் அமையும்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் மன்னார் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களும் இணைந்து கொண்டனர்.

(ம)





திருமலையில் மாகாணக் கல்வி அமைச்சு அலுவலகம் முன்பாக பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் அடையாள உண்ணாவிரதம் இருப்பதையும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் அவர்களுடன் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

# பிரதமர் மலேஷியாவுக்கு அடுத்த வாரம் விஜயம்

கொழும்பு,செப்.3

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் மலேஷியாவுக்குச் செல்லவுள்ளார்.

பிரதமர் அலுவலக பத்திரிகைக் குறிப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலேஷியாவில் தங்கியிருக்கும் காலத்தில் அங்குள்ள முன்னணி வர்த்தகர்களைச் சந்தித்து இலங்கைப் பொருளாதார அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடுவார்.

வருடாந்தம் 20 ஆயிரம் இலங்கையர்களுக்கு மலேஷியாவில் வேலைவாய்ப்பு வழங்கும் ஒப்பந்தம் ஒன்றிலும் பிரதமர் அங்கு கையெழுத்திடவுள்ளார்.

2001 இல் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பொறுப்பேற்ற பின்னர் மலேஷியாவுக்கு அவர் விஜயம் செய்வது இதுவே முதற்றடவையாகும்.

சமாதானக் காலத்தைப் பயன்படுத்தி இலங்கையைப் பொருளாதார ரீதியில் அபிவிருத்தி செய்வதில் பிரதமர் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. அடிக்கடி இடம்பெறும் அவரது வெளிநாட்டு விஜயங்களுக்கும் இதுவே காரணம் என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

(ம)

### நாளை

ஆவணி 18
வியாழக்கிழமை
(04.09.2003)
திதி : அட்டமி
காலை 7.26 வரை
நவமி
பின்னிரவு 5.13 வரை
நட்சத்திரம : கேட்டை
முன்னிரவு 7.32 வரை
சுபநேரம் : 7.35-9.05
ராகுகாலம்: 1,35-3.05
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

கோழைதான் பாவம் செய்கிறான். தைரியசாலி ஒருபோதும் பாவம் செய்வதில்லை.

# 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 - 04 - 1907 | 02 - 09 - 1995 |

## அமரர் ஆறுமுகம் கந்தையா

திதி: 03-09-2003

(21-15-19)

**எட்டு ஆண்டுகள் சென்றாலும்**
**எங்கள் நினைவு உங்களை விட்டுச் செல்லாது**
**என்றும் உங்கள் நினைவில் வாழும்...**

கைதடி தெற்கு,
கைதடி. (22148)

**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

# மரண அறிவித்தல்

## திருமதி கிரியாசக்தி நித்தியானந்தன்

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கிரியாசக்தி நித்தியானந்தன் அவர்கள் நேற்று (02.09.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் க.நித்தியானந்தன் (இளைப்பாறிய உதவி விலை மதிப்பீட்டாளர்) அவர்களின் அன்பு மனைவியும் மோகனாசங்கர் (தொழில் திணைக்களம் - யாழ்.), ரமேஷ் (பாபு - பொறியியலாளர், கொழும்பு), அரவிந்தர் (பொறியியலாளர் - கொழும்பு), மஞ்சுளா (ஆசிரியை - ஸ்ரீகணேசவித்தியாசாலை-சித்தன்கேணி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இரத்தினம்மா (இந்திரா ஸ்ரோர்ஸ், வெலிமடை) ஆகியோரின் அன்பு மகளும் கந்தவனம் - நாகம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் ஆனந்தகுமாரசாமி (இந்திரா ஸ்ரோர்ஸ், மாங்குளம்), காலஞ்சென்ற அருந்தவநாதன் மற்றும் கமலாதேவி (கொழும்பு), தில்லைநாயகி (கொழும்பு), தேவகாரணி (கொழும்பு), சிவசுப்பிரமணியம் (கனடா), சண்முகநாதன் (இந்திரா ஸ்ரோர்ஸ், மாங்குளம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் வசந்தா, இராமநாதன், பிறைசேர்அழகநார், சக்திதாசன், விபுலாதேவி, அருந்ததி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2003) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் வழுக்கையாறு மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"லக்ஷ்சுமி வாசா",*
*சித்தன்கேணி.* (22146)(26-21-19-15)

தகவல்:
க. நித்தியானந்தன் (கணவர்)

## கழிவுநீர் தேங்கி சுகாதார சீர்கேடு

யாழ்.ஜும்மாப் பள்ளிவாசல் ஒழுங்கைப் பகுதியில் உள்ள கழிவு நீர் வாய்க்கால் மண்ணினால் மூடப்பட்டு தடை ஏற்பட்டமையால் அப்பகுதியில் கழிவுநீர் தேங்கி நின்று பெரும் சுகாதார சீர்கேட்டை விளைவித்து வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்டவர்களுக்கு பலமுறை முறையிட்டும் இதுவரை பயனேதும் கிடைக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஒ-30)

# இந்திய சுவாமிகளின் ஆன்மீக சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,செப்.3

திருநெல்வேலியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிமுதல் ஆன்மீகச் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன.

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமிஜி ஸ்ரீஹரி ஓம் அம்மாவின் ஆன்மீகச் சொற்பொழிவும் அங்கு இடம்பெறும். அத்துடன் சுவாமிஜி நித்திய சைதன்யாவின் சொற்பொழிவும், இந்திய வானொலி புகழ் திருமதி கமலா பாஸ்கரின் இசைநிகழ்ச்சியும் அங்கு நடைபெறவுள்ளன.

இந்தச் சொற்பொழிவுகளை கேட்டுப் பயன்பெறுமாறு சாயி சமித்தி நிர்வாகம் கேட்டிருக்கிறது. (ஐ)


# சமாதானத்தொனி

*தீராத வியாதியா?, பில்லி சூனியமா?, கடன் தொல்லையா?, வாழ்க்கையில் தோல்வியா?, பாவ அடிமைத்தனமா?, எதிர்காலத்தைக் குறித்தான ஏக்கமா? வாருங்கள் விடுதலை பெறுங்கள்.*

| இடம் | காலம் | நேரம் |
|---|---|---|
| நாற்சதுர சுவிசேஷசபை<br>நல்லூர் (முத்திரைச்சந்தி)<br>யாழ்ப்பாணம் | புரட்டாதி (செப்ரெம்பர்) மாதம்<br>03ஆம் திகதி (புதன்கிழமை) தொடக்கம்<br>06 ஆம் திகதி (சனிக்கிழமை) வரை | பிற்பகல்<br>4.30மணி |

## தேவ செய்தியாளர்கள்

வண.கலாநிதி லெஸ்லிகீகல் (தலைவர், இலங்கை நாற்சதுர சுவிசேஷசபை)
வண.கலாநிதி கிம்ஹொாக் (சுவிசேஷகர் சிங்கப்பூர்)

குறிப்பு ☛ **04.09.2003 வியாழக்கிழமை தொடக்கம் 06.09.2003 சனிக்கிழமை வரை தினமும் காலை 9.00 மணி தொடக்கம் - மதியம் 12.00 மணிவரை விசேட வேதப்படிப்பு நடைபெறும்.**

***அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.***

தொடர்பு:

## *நாற்சதுர சுவிசேஷசபை*

**673 (241), பருத்தித்துறை வீதி (முத்திரைச்சந்தி), நல்லூர்.**
**T.P. No.: 021- 222-6730, 077 6042899.**


(22121) (21-15-19)



# மிதிவெடி அபாயக் கல்வி வாரம்

## செப்ரெம்பர் 01 தொடக்கம் செப்ரெம்பர் 7 வரை

### மிதிவெடி, வெடிபொருள்களிலிருந்து நாம் எம்மைப் பாதுகாப்பதற்கு



**அபாயமுள்ள பிரதேசங்களை தவிர்த்து நடப்போம்.**

**அதேநேரம், மிதிவெடி பொருள்களைக் கண்டால் அவற்றிற்கு அருகே செல்வதைத் தவிர்த்து மற்றவர்களிற்கும் அந்த ஆபத்து சம்பந்தமான தகவலை வழங்குவதோடு மட்டுமல்லாது, உடனடியாக சம்பந்தப்பட்ட பின்வரும் நிறுவனங்களோடு நேரடியாகவோ அல்லது எங்கள் கிராமத் தலைவர், கிராமசேவையாளர் ஊடாகவோ தொடர்பு கொள்வோம்.**

☛ **மிதிவெடி, செயற்பாட்டு அலுவலகம்,**
**அரச அதிபர் அலுவலகம், யாழ்ப்பாணம்.**

☛ **HALO TRUST நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

☛ **அருகில் உள்ள இராணுவ, பொலீஸ் நிலையங்கள்.**

நாம் நமது நாளாந்த தொடர்பாடல் விடயங்களில் இருந்து அந்நியமான பிரதேசங்களில் தொடர்புகளை மேற்கொள்ளும்போது மிதிவெடி, வெடி பொருள்களை காண நேர்ந்தால் அதனை உதாசீனம் செய்யாது உயர்ந்த மனிதாபிமான நோக்கில் அந்த ஊர்த் தலைவர் ஊடாகவோ அல்லது நேரடியாகவோ சம்பந்தப்பட்ட நிறுவனங்களோடு தொடர்புகொண்டு ஆபத்துக்களைத் தடுக்க உதவுவோம்.

இப்பணியில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள் எவ்வேளையிலும் மக்களின் நலன்கருதி செயற்படத் தயாராக இருப்பதனால் அவற்றை எங்கள் நிறுவனமாகக் கருதி அவர்களுடன் நேசக்கரம் நீட்டி அவர்கள் சேவையைப் பெற்று எங்களை நாம் பாதுகாத்துக் கொள்வோம்.

(21-15-19)

**DISTRICT MINE ACTION OFFICE, JAFFNA**
மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், யாழ்ப்பாணம்.

(சி-29582)

# பிரிட்டனின் பழைமைவாதக் கட்சியின் துணைத் தலைவர் யாழ்ப்பாணம் வருகை

## நிலைமைகளை ஆராய்வதற்காக

பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினரும் பழைமைவாதக் கட்சியின் துணைத்தலைவருமாகிய மைக்கல் அன்க்ரம் (Michael Ancram), பழைமைவாதக் கட்சியின் முன்னாள் பொருளாளர் ஆஷ் கிரவ்ற் பிரபு (Ash croft) ஆகியோர் அடங்கிய குழுவினர் எதிர்வரும் 5ஆம் திகதி யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இக்குழுவினர் அன்று காலை 10 மணிக்கு யாழ். அரச அதிபரை செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். குடாநாட்டு மக்களின் மீள்குடியமர்வு நடவடிக்கைகள், புனரமைப்பு பணிகள் மற்றும் குடாநாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக இக்குழுவினர் அரச அதிபருடனான கலந்துரையாடலில் விரிவாக ஆராயவுள்ளனர்.

பொது அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து பொதுமக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவர்கள் கேட்டறிவர்.

நாவாந்துறை முஸ்லிம் மக்கள் குடியிருக்கும் பகுதி, குருநகர், சாவகச்சேரி ஆகிய பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ள இக்குழுவினர், அங்குள்ள நிலைமைகளை நேரடியாகப் பார்வையிடுவர்.

(ம-8)

## பண்டத்தரிப்பில் இயங்கி வந்த ஆண்கள் குருகுலம் திருநெல்வேலிக்கு மாற்றம்

யாழ்ப்பாணம்,செப்.3

ஸ்ரீ காயத்திரி கமலா ஆண்கள் குருகுலம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் நல்லூர் பிரதேச செயலகத் திற்கு அருகில் இயங்கத் தொடங்கியுள்ளது.

ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடத்தின் அனுசரணையில் இயங்கும் இந்த ஆதரவற்ற பிள்ளைகளுக்கான பராமரிப்பு நிலையத்தில் 11 சிறுவர்கள் தங்கியிருந்து கல்வி கற்கின்றனர்.

கடந்த மே மாதம் முதல் பண்டத்தரிப்பில் இயங்கிவந்த இக்குருகுலக் கல்வி நிலையம் போக்குவரத்து வசதி கருதியே புதிய இடத்தில் திறக்கப்பட்டிருப்பதாக நிலையத்தின் பொறுப்பதிகாரி ஸ்ரீ ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

(ஐ-10-12)

## வடக்கு - கிழக்கில் ஹோட்டல்கள் அமைக்க இடம் தெரியப்படுகிறது

யாழ்ப்பாணம்,செப்.3

வடக்கு - கிழக்கில் ஹோட்டல்கள் அமைக்கப் பொருத்தமான இடங்களைத் தெரிவுசெய்யும் பணியில் வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சு ஈடுபட்டுள்ளது.

இதற்காக, வடக்கு - கிழக்கில் உள்ள 71 உள்ளூராட்சி சபைப் பிரிவுகளிலும் ஹோட்டல்கள் அமைக்கப் பொருத்தமான இடங்களைத் தெரிவுசெய்து தமக்கு அறிவிக்குமாறு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன் உள்ளூராட்சி சபைகளையும் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

இந்தப் பகுதியில் ஏற்கனவே இயங்கிவரும் ஹோட்டல்களின் விவரங்களையும் அனுப்பிவைக்குமாறு பிரதம செயலாளர் கேட்டுள்ளார்.

(ம-185)



நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் அண்மையில் கலாபூஷணம் க.ப.சின்னராசாவின் சிஷ்யர்களான மல்லாகத்தைச் சேர்ந்த சகோதரர்களான தியாகராசா மோகனராசா, தியாகராசா கோகுலராசா ஆகியோரின் மிருதங்க அரங்கேற்றம் இடம் பெற்றது. அப்போது எடுக்கப்பட்ட படம். *படம்: வலிவடக்கு செய்தியாளர்.*

## கசிப்பு வைத்திருந்த பெண்ணுக்கு ஒரு வருட கால கடூழியச் சிறை!

யாழ்ப்பாணம்,செப்.3

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட பெண் ஒருவருக்கு ஒருவருட கடூழியச் சிறைத்தண்டனையும், ஒரு லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

முனியப்பர் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாலசிங்கம் பத்மா என்பவருக்கே இத்தண்டனை வழங்கப்பட்டது.

இந்த நபர் முன்னரும் இதே குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றால் தண்டிக்கப்பட்டிருந்தார்.

கடூழியச் சிறைத்தண்டனையை அனுபவிக்கும் காலப்பகுதியில் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட அபராதத் தொகையை செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் ஒருவருட சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் எனவும் நீதிவான் நபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை -

சட்டவிரோதமாக சாராயம் விற்ற 6 பேருக்கு யாழ். நீதிமன்றம் 21 ஆயிரம் ரூபா அபராதமாக விதித்துள்ளது.

மடம் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை பெனடிக், கண்டிவீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிதம்பரம் அன்ரனி ஏகாம்பரம் மற்றும் பாஷையூரைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை டெனிஸ்லாஸ் ஆகிய மூவரையும் தலா ஆயிரம் ரூபா தண்டப்பணமும், தலா ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும்-

கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த நடராசா பரமசிவம் என்பவருக்கு 5ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 2ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் -

இராசாவின்தோட்டத்தைச் சேர்ந்த காளிதாஸ் ஐங்கரன் என்பவருக்கு 3ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 2 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் -

அரியாலையைச் சேர்ந்த சின்னத்தம்பி குலரத்தினம் என்பவருக்கு ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 2ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் - நீதிவான் உத்தரவிட்டார்.

(ம-5)

## தொழில்நுட்பக் கல்லூரிக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்குப் பெறுமதிவாய்ந்த தகவல் தொழில்நுட்ப உபகரணங்களை மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சு வழங்கியுள்ளது.

திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கான திட்டத்தின் மூலம் இவை வழங்கப்பட்டுள்ளதாக யாழ். தொழில்நுடபக் கல்லூரியின் அதிபர் ந.யோகராஜன் தெரிவித்தார்.

8 கணனிகள், 3 தொலைக்காட்சிப் பெட்டிகள், சி.டி. பிளேயர்கள், 3 போட்டோப் பிரதி இயந்திரம் ஒன்று, புறஜெக்டர் ஒன்று, ஓ.எச்.புறஜெக்டர் ஒன்று முதலானவையே வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-12)

## நெருக்கடியற்ற நேரத்தின் அளவு ஒரு மணித்தியாலத்தால் அதிகரிப்பு

### ரெலிகொம் வட்டாரம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.3

யாழ். குடாநாட்டுக்கான தொலைபேசி இணைப்புகளுக்கு இரவில் நெருக்கடியற்ற நேரத்தின் அளவு ஒரு மணித்தியாலத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக யாழ். ரெலிகொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரை இரவு 10 மணிமுதல் அதிகாலை 5 மணிவரையான நேரமே உள்நாட்டு அழைப்புகளுக்கான நெருக்கடியற்ற நேரமாக இருந்து வந்தது. தற்போது இது ஒரு மணித்தியாலத்தினால் அதிகரிக்கப்பட்டு இரவு 9 மணிமுதல் நெருக்கடியற்ற நேரம் ஆரம்பமாவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நெருக்கடியற்ற நேரத்தில் 9 நிமிடங்கள் பேசும்போதே அது ரெலிகொம்மின் ஒரு யூனிட்டாகக் கணிக்கப்படும்.

(ம-8)

# யாழ்ப்பாணக் கலாசாரம் இதுதானா....?


*அன்பின் ஆசிரியர் அவர்கட்கு!*

அண்மையில் தங்களது பத்திரிகையின் வாயிலாக செய்ந்நன்றி மறப்பது பற்றிய கருத்துக்கள் வெளிவந்துள்ளன. மருத்துவபட்டதாரி ஒருவரின் கருத்துக்கள் எல்லோருடைய மனத்தையும் நெகிழ வைத்துவிட்டன.

பாடசாலையில் ஆசிரியரிடம் பயின்ற நற்பழக்கங்களை பல்கலைக்கழகத்தில் நிலைநாட்ட முடியாமல் வேறு பழக்கங்களுக்கு இடமளித்ததால் ஓட முயல்கின்றார் அவர்.

நெஞ்சில் உரமுடனும் நேர்மைத் துணிவுடனும் அளித்த அவர் கருத்துக்களுக்கு நான் முதலில் நன்றி சொல்லவேண்டும்.

தன்னைச் சூழ்ந்த பல்கலைக்கழக சமூகத்திலும், போதனா வைத்தியசாலையிலும், மக்களிடத்திலும் அதிகாரத்திலிருப்பவர்கள் நாம். அந்நி




லைக்கு எப்படி வந்தார்கள் என்பதை மறந்து நடப்பதையும், உதவி பெற்றபின் உதறித்தள்ளுவதையும் தன்னுடைய சுகத்தை விட்டுக் கொடுக்காமல் நடப்பதையும், செய்ந்நன்றி என்பதை வார்த்தையளவில் வைத்திருப்பதையும்தான் பார்க்கமுடிகின்றது என்கிறார் அவர்.

இதுதான் யாழ்ப்பாணக் கலாசாரம் என்று படித்தவர்களும் மற்றவர்களும் பெருமிதமாகச் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.

ஆனால், இதுதான் யாழ்ப்பாணக் கலாசாரமா? இல்லை; இவை யாழ்ப்பாணக் கலாசாரத்தின் அடியில் உறங்கியிருக்கும் உண்மைகள்.

ஒவ்வொரு மனிதனும், அவனின் கருத்துக்களும் மதிக்கப்பட வேண்டும். கருத்துக்கள் பரிமாறப்படும்பொழுது எல்லோருடைய கருத்துக்களும் மதிக்கப்படவேண்டும்; நடுநிலைமை இருக்கவேண்டும். இதுதான் வெளியில் தெரியும் யாழ்ப்பாணக் கலாசாரம்.

ஆனால், உண்மையில் பதவியைக் காப்பாற்ற, தங்கள் சுகங்களைப் பாதுகாப்பதற்காக ஒரு சிலரின் கருத்துக்களை அவர்கள் கருத்தில் எடுக்கமாட்டார்கள்.

எல்லோருடைய கருத்துக்களும் மதிக்கப்பட்டு நடக்கும் பொழுது, நாம் எல்லோரும் முன்னேறலாம் அல்லது எல்லோரும் தாழ்வடையலாம். நாம் தாழ்வடையாமல் இருப்பதற்காகச் சொல்லப்படும் கருத்துக்கள் சுயநலத்துக்காகப் புறக்கணிக்கப்படுகின்றன.

நடுநிலையில் நிற்கும் பெரியவர்கள், உன்னைப் பலரும் எதிர்த்தால் உன்னிடத்தில்தான் பிழை என்பார்கள். ஆனால், எதிர்க்கும் பலரிடம் உங்களில் பிழையில்லையா என்று நடுநிலையில் நின்று கேட்கமாட்டார்கள்.

## பகிரங்கக் கடிதத்துக்கான பேராசிரியரின் விளக்கம்

உண்மை சிதைவடைந்தாலும் பரவாயில்லை, நடுநிலையில் நின்று எல்லோரையும் ஆதரித்து நடப்பதுதான் யாழ்ப்பாணக் கலாசாரம் பரவாயில்லை எனலாம்.

ஆனால், உண்மையாக நடப்பவர்களைச் சமுதாயத்தில் இருந்து நீக்க முயலுவதும் நமது யாழ்ப்பாணக் கலாசாரமா?

போர்க்காலத்திலும், போர்முடிவடைந்த தற்போதைய நிலையிலும் யாழ்ப்பாண மக்கள் ஏதோவொரு விதத்தில் தம்மை யாழ். மண்ணுக்காக அர்ப்பணித்துள்ளார்கள். எல்லோரும் சேர்ந்து யாழ்ப்பாணத்தை மீளக்கட்டியெழுப்ப முயலும் வேளையில், தேவையில்லை என்று சிலரை யாழ்ப்பாணத்திலிருந்து அப்புறப்படுத்துவது 'யாழ்ப்பாணக் கலாசாரமான' நடுநிலைமையல்ல.

அங்கே உண்மைகள் மறைக்கப்படுகின்றன என்பதுதான் உண்மை.

கசப்பான சில உண்மைகளைச் சொல்லவேண்டிய கட்டம் இப்போது எனக்கு வந்துவிட்டது.

எனக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ பதவி அளித்தால், தாங்கள் மேற்கொண்டிருக்கும் மேலதிகப் படிப்பித்தலை நிற்பாட்டப்போவதாகச் சிலர் சொல்லிவந்தனர். எனது பதவி நியமனத் தேர்வுக் குழுவை சந்திக்க முன்னரே அந்தப் படிப்பித்தலையும் அவர்கள் நிறுத்திவிட்டார்கள்.

இதற்குக் காரணம் என்ன என்று வினவியபோது; என் மேல் நிரூபிக்கப்படாத குற்றங்களைச் சுமத்தினார்கள்.

பதவியையும், சொந்த சொகுசுகளையும் பேணும் அடிப்படையில் உண்மை மறைக்கப்பட்ட போதும், நடுநிலைமை என்ற போர்வைக்குள் பலரையும் சந்தோசப்படுத்துவதை மட்டும் கருத்திற்கொள்ளும் யாழ்ப்பாணக் கலாசாரம் பல்கலைக்கழகத்தில் ஓங்க, அது நிரூபிக்கப்படாத குற்றங்களை ஏற்றுக்கொண்டு விட்டது.

ஒருவரது சொந்த அபிலாஷைகளை கருத்தில் எடுக்காது, உண்மையான நடுநிலையில் நின்று, மக்களுக்கு ஒரு நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணரும் மருத்துவபீட மாணவருக்கு ஒரு ஆசிரியரும் தேவை என்பதை கருத்திற்கொண்டு 6 வருடகாலம் மருத்துவபீடத்தில் சேவை புரிந்தவருக்கு பதவி கொடுப்பதா இல்லையா என்று தீர்மானிக்கும்படி மேலிடத்தின் பல இடங்களில் இருந்தும் வேண்டுகோள்கள் வந்தும் பல்கலைக்கழகம் எனக்குப் பதவி தரவில்லை.

சுகாதார அமைச்சரின் பிரதம காரியதரிசி டாக்டர் ரெஜி பெரேராவை நான் சந்தித்தபோது, எனக்கு தற்காலிக நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் பதவியேனும் சுகாதார திணைக்களத்தின் ஊடாக யாழ்ப்பாணத்திற்குத் தரமாட்டோம் என்றார். அவராக இதைச் சொல்லியிருக்கமாட்டார்; அவரைச் சொல்ல வைத்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

கொழும்பில் அமைந்துள்ள மருத்துவ பட்டப்பின்படிப்பு ஸ்தாபனத்திடம் (Postgraduate Institute of Medicine) எனக்கு நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணருக்குரிய அங்கீகாரம் வழங்கவேண்டாம் என்று யாழ்ப்பாணத்திலிருந்து எதிர் மனுக்கள் அனுப்பப்பட்டதாக அந்த ஸ்தாபனத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

இப்போது, செய்ந்நன்றி மறக்கப்பட்டதா, மக்களுக்கு நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணருடைய சேவை நிராகரிக்கப்பட்டதா, மாணவர்களுக்கு ஒரு நல்ல ஆசிரியரின் சேவை நிராகரிக்கப்பட்டதா, அவர்களுக்கு யாழ்ப்பாணக் கலாசாரம் பற்றிய தப்பபிப்பிராயம் ஏற்பட வழிவகுக்கப்பட்டதா என்று தீர்மானிக்கும் பொறுப்பை வாசகர்களிடம் விட்டுவிடுகின்றேன்.

நான் யாழ்ப்பாணத்திலிருந்து சென்றாலும், யாழ்ப்பாணத்திற்கு நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணரும், நல்ல ஆசிரியர்களும் வருவார்கள். ஆனால், பதவியையும் சொந்த சொகுசுகளையும் பேணும் அடிப்படையில் உண்மை மறைக்கப்பட்ட போதும் நடுநிலைமை என்ற போர்வைக்குள் பலரையும் திருப்திப்படுத்துவதை மட்டும் கருத்திற் கொள்ளும் யாழ்ப்பாணக் கலாசாரம் மறைந்துவிடாது.

நமக்கு சுதந்திரம் கிடைத்தும் என்ன பயன்?

*இப்படிக்கு*

பேராசிரியர் வி.குணானந்தம் (யாழ். பல்கலைக்கழக முன்னாள் வருகைதரு சத்திர சிகிச்சை பேராசிரியர். யாழ். போதனா வைத்தியசாலை நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### புறொயிலர் விற்பனைக்கு

தரமான புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (22133)

### பூங்கன்று விற்பனை

முசந்தாஸ் (சிவப்பு, பிங்), செவ்வரத்தை, மஞ்சள் கொடிப்பூ, பாம்ஸ், எவக்கிறீன், ஈரப்பலா ஆகிய கன்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (I.C.R.C.இற்கு அண்மையில்) T.P. 222-6563. (22137)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. தொடர்பு:- கி.சுஜீபன், கலைவாணி ஒழுங்கை, பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு.(22150)

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி மருத்துவபீடத்திற்கு முன்பாக வெட்டுக் கிணற்றுடன் 5½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- கைலைநாதன் (காலை 8-11ம் மாலை 4-6வரையும்), ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி (ஊனமுற்றோர் சங்கத்திற்கு எதிர் ஒழுங்கை). (22151)

### வகுப்புகள்

O/L கணிதத்தில் A,B,C பெறுபேறுடைய Paper Class 10 மாதிரி வினாத்தாள்களுக்கு விடையளித்தல். ஆண்டு 9-10 வரையும் துரிதமாகக் கற்பிக்கப்படும். தொடர்பு: இல. 85, சிவன கோயிலடி (சிவன் கோவில் பின்புறம்), திருநெல்வேலி. (21915)

---

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**பட்டப்பின் படிப்புகள் பீடம்**
*ஈராண்டுப் பகுதி நேரப் பட்டப்பின் கல்வித்தகைமைக் கற்கைநெறி – 2003/2005*
*யாழ்ப்பாணம் – வவுனியா வளாகம்*

புதிய அனுமதி

மேற்படி அனுமதிக்காக ஏற்கனவே விண்ணப்பப் பத்திரங்கள் பெற்றவர்கள் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 11. 09. 2003 ஆம் திகதிக்கு முன்பாக *பீடாதிபதி அலுவலகம், பட்டப்பின் படிப்புகள் பீடம், யாழ். பல்கலைக்கழகத்தில்* சமர்ப்பித்தல் வேண்டும்.

எழுத்துப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் தனிப்பட்ட ரீதியில் அனுப்பிவைக்கப்படும்.

மேற்படி பரீட்சை 27. 09. 2003இல் நடைபெறும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்,
02. 09. 2003

(C/29942) (25)

---

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**பட்டப்பின் படிப்புகள் பீடம்**
*பட்டப்பின் கல்வித்தகைமை*
*(யாழ்ப்பாணம், வவுனியா வளாகம்)*
*பகுதி நேரம் I, பகுதி நேரம் II, முழுநேரம் – இரண்டாம் பருவத்தேர்வு*

மேற்படி தேர்வுகள் 2003. 09. 25 அன்று யாழ்.பல்கலைக்கழகத்திலும் (பகுதி நேரம் I, பகுதி நேரம் II, முழு நேரம்) வவுனியா வளாகத்திலும் (பகுதி நேரம் I) நடைபெறவுள்ளன.

மேற்படி பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகளை *பீடாதிபதி அலுவலகம், பட்டப்பின் படிப்புகள் பீடம், யாழ். பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும்* 2003. 09. 17 ஆம் திகதிக்குப் பின்னர் பெற்றுக்கொள்ளலாம்.

**பதிவாளர்**
யாழ். பல்கலைக்கழகம்
02.09.2003. (C29941)

---

# எம்.பிக்கள் ஆன்மீக ரீதியிலும் முன்மாதிரியாகத் திகழவேண்டும்

## அமைச்சர் அஸ்வர் தெரிவிப்பு

நாடாளுமன்ற நடைமுறைகளைப பின்பற்றும் போது சாதாரண முன்னேறங்களை மட்டும் கருத்திற்கொள்ளாது நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் ஆன்மீக ரீதியிலும் நல்ல முன்மாதிரிகளுடன் செயற்பட வேண்டும். இத்துறையில் இம்மாநாட்டில் பங்குபற்றிக் கொண்டிருக்கும் டில்லி லோகசபையின் துணைச் சபாநாயகர் பீ. எம்.சயீத் உலகின் ஏனைய நாடாளுமன்றங்களின் உறுப்பினர்களுக்கு சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கின்றார்.

- இவ்வாறு நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் ஏ.எச்.எம் அஸ்வர் கூறினார்.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் ஆசிய பிராந்திய மாநாட்டின் இரண்டாவது நாள் அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் அஸ்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித தலைவர் அந்த்ரஹெரன்னெற்றி தலைமையில் நடைபெற்ற இன்றைய மாநாட்டில் அமைச்சர் அஸ்வர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

சயீத் 'தங்கள்' பரம்பரையைச் சேர்ந்தவர்கள் இவர்களின் சொந்த இடம் அந்தரோத் தீவாகும். இலட்சம் தீவுகளடங்கிய நாடாளுமன்றத் தொகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இவர்களின் தந்தை ஒரு 'தங்கள்' சீரிய சன்மார்க்க போதகர் ஆவார்.

அன்னார், இலங்கையில் மரணமடைந்து குருநாகலில் அடக்கம் செயயப்பட்டுள்ளார். அவரின் சியாரத்தை தரிசித்து விட்டே சயீத் இங்கு வந்துள்ளார்.

ஆன்மீக ரீதியில் இலங்கை முஸ்லிம்களுக்கு அளப்பரிய சேவைகள் ஆற்றிய பரம்பரையைச் சேர்ந்த ஒருவர், உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் அதி உயர் மக்களவையின் லோகசபையில் புகழ்மிக்க பதவியை வகிப்பது உலக முஸ்லிம்கள் அனைவருக்கும் பெருமை சேர்க்கும் ஒன்றாகும்.

இன்று உலகில் நிலவும் நாடாளுமன்ற நடைமுறைகளிலும் காலத்திற்கேற்ப மாற்றங்கள் செய்யவேண்டியது அவசியமாகும் அந்த வகையில், இலங்கை நாடாளுமன்ற நடவடிக்கைகளை மேம்படுத்த உயர்நிலைக் குழுககளை அமைக்க எமது பிரதமர் முனவந்திருப்பது பாராட்டத் தக்கதாகும். இவ்வாறான உயர்நிலைக்குழுக்கள் 14இற்கும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களே தலைவர்களாக நியமிக்கப்படவுள்ளார்கள்

- இவ்வாறு அவர் கூறினார்.

---

## கணனித் தொகுதி அன்பளிப்பும் வகுப்புகள் ஆரம்பமும்

காலம் : **03.09.2003 புதன்கிழமை மு.ப.9.30 மணி**

**கிருஷ்ணமூர்த்தி வதனரூபன்**
**(மாவீரர் லெப்-மருததம்பி) நினைவாக**
கணனித் தொகுதி அன்பளிப்பு செய்பவர்
**திரு.இளையதம்பி சின்னையா** (பழைய மாணவர்)
வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர்
**திரு.வே.தி.செல்வரத்தினம்** அவர்களால் வகுப்புகள் ஆரம்பித்து வைக்கப்படும்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம்

(C29939)(21-14-17)

---

## 44ஆவது ஆண்டு விளையாட்டு விழா

**மைதான சீரின்மை காரணமாக பிற்போடப்பட்ட விளையாட்டு விழாவானது முன்னர் அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலின்படி எதிர்வரும் 6ஆம், 7ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.**

செயலாளர்,
**பருத்தித்துறை**
**ஐக்கிய விளையாட்டுக்கழகம்.**

(22153)(21-14-17)

---

உ
குப்பிளான்
**அருள்மிகு ஸ்ரீகாளியம்பாள் திருக்கோயில்**

## மகாகும்பாபிஷேகப் பெருவிழா

**இன்று (03.09.2003) புதன்கிழமை காலை 7.15 மணிமுதல் 8.15மணி வரை சுபானுவருஷம் ஆவணி மாதம் 17ஆம் நாள் இன்று (03.09.2003) புதன்கிழமை அனுசநட்சத்திரம் இணையும் நன்னாளில் காலை 7.30 மணிக்கு ஸ்தூபி அபிஷேகமும் 8.15 மணிக்குள் மகா கும்பாபிஷேகமும் நடைபெறுகின்றன.**

சர்வபோதகர்: பண்டிதர் **சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்**
*புன்னாலைக்கட்டுவன்*

பிரதிஷ்டா பிரதமகுரு: கிரியாகலாபமணி
ஆகமபிரதிஷ்டா வித்பஜோதி
**சிவஞானபாஸ்கரன் சிவஸ்ரீ சி. கிருஷ்ணசாமி குருக்கள்**
*புன்னாலைக்கட்டுவன்*

**தொடர்ந்து 12 தினங்கள் மண்டாலாபிஷேகம் தினசரி பகல் 11மணிக்கு நிகழ்வுறும்.**

*அனைவரும் வருக காளியம்பாள் அருள் பெறுக.*
குப்பிளான - **ஆலய பரிபாலனசபை**

(22152) (26-21-14-17)

---

## மரண அறிவித்தல்

### கதிரவேலு கந்தையா

(ஓய்வுபெற்ற கைதடி அரச முதியோர் இல்ல ஊழியரும், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளரும்)

கைதடி தெற்கைச் சேர்ந்த, கதிரவேலு கந்தையா அவர்கள் (31.8.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2003) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கைதடி வடக்கு ஊத்தல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி தெற்கு,*
*வலந்தலை வீதி, கைதடி* (21554)

தகவல
க.சின்னட்டி (மனைவி)

---

## போக்குவரத்து, பெருந்தெருக்கள், விமானப்போக்குவரத்து அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

(வடமாகாணம்)

### குமுதினிப் படகுச் சேவை

யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்வகிக்கப்படும் தீவுப்பகுதிகட்கிடையேயான குமுதினிப் படகுச் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு பின்வரும் பதவிகளிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு ஆகிய பகுதிகளை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட விண்ணப்பதாரிகளிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தண்டேல்/சுக்கான் கையாள்பவர்** (COXSWAIN)

தரம் - 02
சம்பள அளவு- 4730/- - 09x110/- - 8x120/- - 6680/-
வயதெல்லை- 45 வயதிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க திணைக்களங்களில்/ கூட்டுத்தாபனங்களில் கடமையாற்றுவோருக்கு மேல் வயதெல்லை கவனத்தில் எடுக்கப்பட மாட்டாது.

**தகைமைகளும் வேலை அனுபவமும்**

அ. விண்ணப்பதாரி துறைமுகத்தின் உட்பகுதியிலும் அதன் வெளிக்கடல் பிரதேசத்திலும் கடல் பிரயாண விதிமுறைகள் சம்பந்தமான அறிவை கொண்டிருத்தல் வேண்டும்.
ஆ. துறைமுகத்தினால் வழங்கப்படும் சமிக்ஞைகள் சம்பந்தமான அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
இ. உயிர்காப்பு முறைகளும் பாதுகாப்பு முன் எச்சரிக்கை சம்பந்தமான அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
ஈ. கடல் தூரங்கள் தொடர்பான அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
உ. படகினை பத்திரமாக நங்கூரம் இடுதல், அதற்கு கயிற்றினைப் பயன்படுத்துதல் சம்பந்தமான திறனைக் கொண்டிருத்தல் வேண்டும்.
ஊ. இதற்கு முன் படகுகளைக் கையாண்டு வந்தமைக்கான அனுபவத்தைக கொண்டிருத்தல் வேண்டும்.

குறிப்பு: தகுதிவாய்ந்த விண்ணப்பதாரி வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் நடத்தப்படும் தொழில்சார் பரீட்சையில் தோற்றி சித்தியெய்வதன் மூலம் மேற்படி நியமனத்தை பெற்றுக்கொள்ளமுடியும்.

**இயந்திரப் படகு சாரதி** (BOAT ENGINE DRIVER)

தரம்- தரம்- 02
சம்பள அளவு- 4130/- - 14x110/- - 6x130/- - 6450/-
வயதெல்லை- 45 வயதிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க திணைக்களங்களில், கூட்டுத்தாபனங்களில் கடமையாற்றுவோருக்கு மேல் வயதெல்லை கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.)

**தகைமைகளும் வேலை அனுபவமும்**

விண்ணப்பதாரி 8ஆம் வகுப்பு சித்தியடைந்திருப்பதுடன் சம்பந்தப்பட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் இரண்டு வருட முன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
குறிப்பு:- குறிப்பு:- தகுதிவாய்ந்த விண்ணப்பதாரி வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் நடத்தப்படும் தொழில்சார் பரீட்சையில் தோற்றி சித்தியெய்வதன் மூலம் மேற்படி நியமனத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

**கப்பல் சிப்பந்தி** (BOAT MAN)

தரம்- தரம் - 02
சம்பள அளவு - 4150/- - 14x110/- 6x130/- - 6450/-
வயதெல்லை - 45 வயதிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க திணைக்களங்களில், கூட்டுத்தாபனங்களில் கடமையாற்றுவோருக்கு மேல் வயதெல்லை கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.)

**தகைமைகளும் வேலை அனுபவமும்**

விண்ணப்பதாரி 8ஆம் வகுப்பு சித்தியடைந்திருப்பதுடன் சம்பந்தப்பட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன், இரண்டு வருட முன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
குறிப்பு:- குறிப்பு:- தகுதிவாய்ந்த விண்ணப்பதாரி வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் நடத்தப்படும் தொழில்சார் பரீட்சையில் தோற்றி சித்தியெய்வதன் மூலம் மேற்படி நியமனத்தை பெற்றுக்கொள்ளமுடியும்.

**எழுதுவினைஞர்** (CLERK/TOLL COLLECTOR)

தரம் - தரம் - 02
சம்பள அளவு- 5185/- - 16x130 - 7265/-
வயதெல்லை- 45 வயதிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க திணைக்களங்களில், கூட்டுத்தாபனங்களில் கடமையாற்றுவோருக்கு மேல் வயதெல்லை கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.)

**தகைமைகள்**- சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த. (சாதாரணம்) பரீட்சையில் 2 அமர்வுகளுக்கு மேற்படாது சித்தி பெற்றிருப்பதுடன் மொழி, எண்கணிதம்/தூயகணிதம்/வர்த்தக எண்கணிதம் உட்பட நான்கு (4) பாடங்களில் திறமைச்சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.

**தொழில் நிபந்தனைகள்**

மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான நியமனங்கள் யாவும் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு வழங்கப்படும். தொடர்ந்து அவரது தொழில் திறமையின் அடிப்படையில் வேலை நீடிப்பு கவனத்தில் எடுக்கப்படும்.

**வேறு நன்மைகள்**

ஊழியர் சேமலாபநிதிக்கு தொழில் தருநரால் அடிப்படைச் சம்பளத்தில் 12% பங்களிப்பும் ஊழியரிடமிருந்து 8%மும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு தொழில் தருநரால் 3%மும் பங்களிப்பு செய்யப்படும்.

முழுவிபரங்களடக்கிய விண்ணப்பங்கள் விண்ணப்பதாரிக்கு உறவினரற்ற நன்கு அறிமுகமான இருவரின் பெயர் முகவரிகளையும் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் **மாகாணப் பணிப்பாளர் வ.கி (வ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு 15. 09. 2003இற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் தற்போது கடமையாற்றுவோர் தங்களது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களிற்கூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

பி.தயானந்தா,
பொது முகாமையாளர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.
"செத்சிறிபாய",
பத்தரமுல்லை.

திகதி 28.08.2003

(C29937) (26-21-14-17)

1990ஆம் ஆண்டு செப்ரெம்பர் படுகொலைகள் நினைவாக

# மட்டு. மாவட்டத்தில் 5 ஆம் திகதியை துக்கதினமாக அனுஷ்டிக்க கோரிக்கை

ஆரையம்பதி,செப்.3

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1990 ஜுன் மாதத்திற்குப் பின்னர் பாதுகாப்புப் படைகளாலும், ஊர்காவற் படையினராலும் படுகொலை செய்யப்பட்டவர்களை நினைவுகூர்ந்து எதிர்வரும் 5ஆம் திகதியை துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெருமன்றமும், மட்டக்களப்பு, அம்பாறை இந்து ஆலயங்களின் தலைமை ஒன்றியமும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு சகல இந்து, கிறிஸ்தவ ஆலயங்களிலும் மணிகள் ஒலிக்கப்பட்டு 7 மணிக்கு விசேட பூஜைகள் நடத்தப்படவேண்டும் எனவும், களியாட்ட நிகழ்வுகளைத் தவிர்த்து சோக இசை எழுப்பப்படுவதோடு, பொதுக் கட்டடங்கள், வீடுகள், வர்த்தக நிலையங்கள், வாகனங்கள் அனைத்திலும் கறுப்புக் கொடியேற்றப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டிருக்கிறது.

ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் உட்பட அனைத்து பொது மக்களும் கறுப்புப்பட்டி அணிந்து செல்வதோடு பாடசாலைகள் அனைத்திலும் காலையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களை நினைவு கூரும் நிகழ்வுகள் இடம்பெறவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அன்றைய தினம் வந்தாறுமூலையில் உள்ள கிழக்குப் பல்கலைக் கழக மைதானத்தில் காலை 10 மணிக்கு படுகொலையுண்டோரை நினைவுகூரும் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமில் 1990ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி 158 பொது மக்களும், 9ஆம் திகதி சத்துருகொண்டான் பிள்ளையாரடி, கொக்குவில் பனிச்சையடி கிராமங்களைச் சேர்ந்த 187 பொதுமக்களும், 23 ஆம் திகதி மீண்டும் பல்கலைக்கழக அகதிமுகாமில் 16 பொது மக்களும் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# கற்கை சாரா பணியாளர்களின் போராட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு, செப்.3

பதினேழு தினங்களாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த கற்கைசாரா பணியாளர்கள் நேற்றுமுன்தினம் தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.

இவர்களில் பெரும்பாலானோர் நேற்றே கடமைக்குத் திரும்பியிருந்தனர் என பல்கலைக்கழக உபவேந்தர்கள் தெரிவித்தனர்.

அமைச்சர்களுடன் நடைபெற்ற பேச்சுக்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமையவே வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. இந்தத் தீர்மானங்கள் ஏனைய ஊழியர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளன என்று பல்கலைக்கழக கற்கைசாரா பணியாளர்கள் சங்கக்கூட்டமைப்பு தெரிவித்தது.

இந்தத் தீர்மானங்கள் குறித்து ஊழியர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டமொன்றையும் பல்கலைக்கழக கற்கைசாரா பணியாளர்களின் கூட்டமைப்பு நடத்தியது.

# பயங்கரவாதத்தையும் வறுமையையும் ஒழிக்க பொதுநலவாய நாடுகள் ஒன்றுபடவேண்டும்!

## சபாநாயகர் வேண்டுகோள்

'எதிர்பாராத சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு உறுதியான திட்டங்களை வகுத்து செயற்படவேண்டும். இன்று பயங்கரவாதமும் வறுமையும் பல நாடுகளின் அமைதிக்கும் சமூக வாழ்வுக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளன. எனவே, பொதுநலவாய நாடுகள் இந்த சவால்களை முறியடிக்க ஒன்றுபட்ட இணக்கப்பாட்டுடன் செயற்படவேண்டும்."

- இப்படி சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா கோரிக்கை விடுத்தார்.

பொதுநலவாய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சங்கத்தின் ஆசிய பிராந்திய மாநாட்டை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்து பேசும்போதே சபாநாயகர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில நடைபெற்ற பிராந்திய மாநாட்டில் இலங்கை, இந்தியா, மாலைதீவு, பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 120 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

'ஆசிய பிராந்தியத்தில் நாடாளுமன்ற ஜனநாயகத்தை உறுதிப்படுத்தல்' என்ற தொனிப்பொருளில் இம் மாநாடு நடைபெறுகிறது.

அங்குரார்ப்பண உரைநிகழ்த்திய சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா மேலும் கூறியதாவது:-

இன்று நடைபெறும் இந்த மாநாடு 2001ஆம் ஆண்டு ஒக்ரோபரில் இங்கு நடைபெறவிருந்தது. சில துரதிர்ஷ்டமான சம்பவங்களால் பிற்போடப்பட்டது.

நாடாளுமன்றம் எந்தச் சமயத்திலும் நீதித் துறையின் சுதந்திரமான செயற்பாட்டிற்கு மதிப்பளிக்க வேண்டும். அதேபோன்று நீதித்துறையும் நாடாளுமன்றத்தின் இறைமையை அங்கீகரிப்பது இன்றியமையாததாகும் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் பெண்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான திட்டம் ஒன்றை வகுத்துள்ளோம். எதிர்வரும் தேர்தல்களில் இதனை செயற்படுத்த எமது கட்சி வலியுறுத்தும் எனவும் சபாநாயகர் குறிப்பிட்டார்.

சபாநாயகரின் இக்கருத்தை இந்திய நாடாளுமன்ற பிரதி சபாநாயகர் பீ.எம்.சயீட் ஆதரித்துப் பேசினார்.

இந்திய சட்ட சபையிலும் லோக் சபாவிலும் மூன்றில் ஒரு பங்கு ஆசனங்களைப் பெண்களுக்கு வழங்குவது சட்டமாக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் மூன்றில் ஒரு பங்கினர் பெண்களே. பல அமைப்புகளில் தலைமைப் பதவிகளிலும் பெண்கள் இருக்கின்றனர். இதன் பயனாக பத்து லட்சம் பெண்கள் உள்ளூர் மட்டத்தில் தீர்மானம் எடுக்கும் அதிகாரப் பதவிகளில் இருக்கிறார்கள் என்றும் இந்திய நாடாளுமன்ற பிரதி சபாநாயகர் கூறினார்.

இம்மாநாட்டில் இலங்கையின் சார்பில் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர், அமைச்சர் ஹெலிய ரம்புக்வெல, நாடாளுமன்ற உறுப்பினர்களான என்.ரவிராஜ், திருமதி பேரியல் அஷ்ரப் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவ் வைபவத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, பொதுநலவாய நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ஜே.சி.மல்கோத்ரா, இலங்கை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் திருமதி பிரியானி விஜேசேகர ஆகியோரும் உரையாற்றினர். (ம)

புலிகள் - முஸ்லிம் காங்கிரஸ்

# தலைமைகள் மனந்திறந்து பேசினால் கிழக்குப் பிரதேச பிரச்சினைகள் தீரும்!

## பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கிழக்கு மாகாண தலைமைத்துவமும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவமும் மனம் திறந்து பேசுவதன் மூலம் மாத்திரமே கிழக்குப் பிராந்தியத்திலே சமாதானத்தை உயிர்ப்பிக்கமுடியும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும் வீடமைப்பு பிரதியமைச்சருமான பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

கவிஞர் ஏறாவூர் எம்.சி.உசனார் எழுதிய 'முரசே நீ முழங்கு' கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை ஏறாவூர் அலி கார் தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

அந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவூத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும கூறுகையில்-

இலங்கையிலே சமாதானத்தை ஏற்படுத்த விரும்பும் அனைத்து சக்திகளும் இதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருவதுடன் சர்வதேச சமூகமும் இதற்கு உதவவேண்டும்.

அரசும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் பேச்சுக்களை மேற்கொள்வதன் மூலம் மட்டும் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்திவிட முடியாது.

முஸ்லிம் மக்களுக்கு போதிய பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்க வேண்டியதும், அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியதும் அரசின் பொறுப்பாகும். முஸ்லிம்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதிலே தான் சமாதானத்தின் வெற்றி தங்கியுள்ளது.

கிழக்கு மாகாணத்திலே தமிழ்-முஸ்லிம் சமூகங்களுக்கிடையே நிலவுகின்ற பிரச்சினைகளுக்கும் சுமுகமான தீர்வுகள் காணப்பட்டு கலவர சூழ்நிலை ஒழித்துக் கட்டப்படுகின்ற போதுதான் சமாதானத்தை உயிர் பெறச் செய்யமுடியும்.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இதற்கு முன்னரும் பல தடவைகள் சமாதான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு அவை வெற்றியளிக்கவில்லை.

சிங்களத் தரப்புக்கும், தமிழர் தரப்புக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினைகள் மூலமாகவும் கருத்து வேறுபாடுகளின் அடிப்படையிலுமே சமாதான முன்னெடுப்புக்கள் கடந்த காலங்களில் முறிவடைந்தன.

இம்முறை இந்தச் சூழ்நிலையைத் தவிர்த்துக்கொண்டு தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையே ஏற்படுகின்ற பிரச்சினைகளின் மூலமாக சமாதானம் குலைந்துவிட்டது என்று கூறுவதற்கு சமாதான விரோத தீய சக்திகள் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன.

இந்த அபாயகரமான சூழ்நிலை ஏற்படுவதற்கு வடக்கு, கிழக்கு வாழ் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது - என்று அவர் கூறினார். (ம)




தீவக அரிமாக் கழகத்தின் ஏற்பாட்டில் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகா வித்தியாலயத்தில் அண்மையில் இடம் பெற்ற பெற்றோருக்கும் மாணவர்களுக்குமான பொதுச் சுகாதார கருத்தரங்கில் கழகத் தலைவர் எம்.மகேந்திரன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (ஐ-10)

வலி. வடக்குப் பிரதேசத்தில்

# பாதீனியம் களையினை அகற்ற எழுச்சிப் பேரவை நடவடிக்கை

யாழ்ப்பாணம்,செப்.3

வலி.வடக்குப் பிரதேசத்தில் பல்வேறு இடங்களிலும் தீவிரமாகப் பரவிவருகின்ற பாதீனியம் களைகளை அகற்றுவதற்கு அப்பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வலி.வடக்குப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் மாநாடு அண்மையில் நடைபெற்றபோது பாதீனியத்தை விரைவில் அகற்ற வேண்டுமென அங்கு தீர்மானிக்கப்பட்டது.

இதனையடுத்தே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொடர்ந்து பரவிவருகின்ற பாதீனியம் களையினால் விவசாயிகளுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியில் நீண்ட காலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ள குளங்களைப் புனரமைப்புச்செய்யவும் எழுச்சிப் பேரவை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (ம-10-86)

# ஆபாச உணர்வுகளில் சிக்காமல் இளைஞர்களை காப்பாற்றவேண்டும்

## தமிழீழ திரைப்பட வெளியீட்டுப் பிரிவு கோரிக்கை

வவுனியா,செப்.3

ஆபாச உணர்ச்சிகளில் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் சிக்காமல் அவர்களைக் காப்பாற்றவேண்டும்.

- இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் துறையின் தமிழீழ திரைப்பட வெளியீட்டுப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி பிரிவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எமது இனத்தில் பண்பாட்டு மரபுக் கோட்பாட்டைச் சிதைக்கும் வகையில் சில சக்திகளின் உள்நோக்கமான செயற்பாடுகளுக்கு இடமளிக்கக் கூடாது.

எமது மக்கள், அதிலும் குறிப்பாக எமது திருநாட்டின் எதிர்காலச் சிற்பிகளான இளைஞர்களை, யுவதிகளை ஆபாச உணர்ச்சிகளுக்கும் மற்றும் அழிவுச் சக்திகளிற்கும் அடிமையாகிப்போகாது காப்பாற்றவேண்டும்.

இந்நோக்கத்திற்கு ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளும் அதேவேளை, சில சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாகவும் மற்றும் எமது போராட்ட எதிர்ப்புச் சக்திகளின் கட்டாயத்தின்பேரிலும் தனிமனித வாழ்வைப் பாதிக்கக் கூடியவகையிலான போதைப் பொருள்களையும் அத்தோடு பெண்களை இழிவுபடுத்தும் கீழ்த்தரமான காட்சிகளை உள்ளடக்கிய திரைப்படங்களையும் திட்டமிட்டு எமது மக்கள் மத்தியில் வழங்கி வருபவர்களை நாம் நன்கு அறிவோம்.

இதை நாம் எமது இனத்தின் பண்பாட்டு மரபை மீறும் செயலாக மட்டும் கருதவில்லை. பொது மனித பண்பாட்டிற்கே ஒவ்வாத அநாகரிகமான செயற்பாடாகவே கருதுகின்றோம்.

இத்தகைய திரைப்படங்களை தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் எந்தவொரு திரையரங்கிலும் திரையிட்டுக் காண்பிப்பதற்குத் தடை செய்யப்பட்டிருந்தமை யாவரும் அறிந்ததே.

இந்நடைமுறைகள் தொடர்பாக நாம் திரையரங்க உரிமையாளர்களிற்கும் நடத்துநர்களுக்கும் ஏற்கனவே பல தடவைகள் பூரண தெளிவூட்டலுடன் கூடிய அறிவுறுத்தல்களை வழங்கியும் இருந்தோம்.

அவர்களும் அதனை ஏற்று உரிய முறையில் நடைமுறைப்படுத்தி வந்தமையையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இருந்தபோதிலும் ஸ்ரீலங்காவின் திரைப்படக் கூட்டுத்தாபனத்தாலும் அதன் முகவர்களினாலும் வேண்டும் என்றே இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிக்குள் இருக்கும் திரையரங்குகளுக்கு சில கீழ்த்தரமான திரைப்படப் பிரதிகள் கட்டாயப்படுத்தி வழங்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட அத்திரைப்படங்களைத் திரையிடாவிட்டால் மேற்கொண்டு வெளிவரும் எந்தவொரு திரைப்படமும் அவர்களுக்கு வழங்கப்படமாட்டாது எனவும் வலியுறுத்தி வருகின்றனர்.

எனவே, பெருமைக்குரிய தமிழ் பேசும் இனத்தவராகிய நாம் உலகில் தனித்துவமிக்க மரபுக்குரியவர்கள். எமது இனத்தின் பண்பாட்டு வேரையே அடியோடு சாய்க்க நினைக்கும் சக்திகளிற்கு இடமளிக்காது, விழிப்பாக இருந்து எமது இனத்தின் தனித்துவத்தைப் பேணிப் பாதுகாக்கவேண்டும். இத்துறைசார்ந்த சகலரும் முழு இதய சுத்தியுடன் எமமுடன் ஒத்துழைத்துச் செயற்படவேண்டும் என்பதனை மீண்டும் அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றோம்.

- இவ்வாறு தமிழீழ திரைப்பட வெளியீட்டுப் பிரிவு தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் திரைப்படப் பிரிவினர், வவுனியாவில் 'சீல்' வைக்கப்பட்டிருந்த இரண்டு திரையரங்குகளும் முதலாம் திகதி முதல் இயங்க அனுமதி வழங்கியுள்ளனர். நேற்றுமுன்தினம் மேற்படி திரையரங்குகளில் படங்கள் காண்பிக்கப்பட்டன.

### அதிபர்களுக்கான வினைத் திறமைகாண் தடைப் பரீட்சை

யாழ்ப்பாணம்,செப்.3

பாடசாலை அதிபர்களுக்கான வினைத் திறமைகாண் தடைப் பரீட்சை எதிர்வரும் 13, 14ஆம் திகதிகளில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ். கல்வி வலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை -

வன்னி மாவட்ட பாடசாலை அதிபர்களும் இப்போட்டிப் பரீட்சையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-ரி)

## An international non-government Organization engaged in economic & Social Development Program

care

CARE International seeks the services of following Positions for the Wanni Development Project.

CARE INTERNATIONAL in Sri Lanka, a leading International Non Governmental Organization is actively involved in economic empowerment and confronting issues of social margin alization. We have an island wide network and currently manage several projects towards this objective.

*The Wanni Development Projects objective is to improve the living conditions for vulnerable IDPs, returnees and vulnerable local households in the conflict - affected areas. To improve the ability of the local civil society and organizations to implement community - oriented interventions that will assist in reducing vulnerability and distress, improving household food production and household income.*

**1. Project Officer - Capacity Building**
The selected candidate will assist partner organizations in developing their technical and organizational standards to ensure the sustainability of the organizations. S/He will also be responsible for liaising, with local authorities to promote the project in the Wanni Region.

Graduates/ Diploma holders in Social Science with a minimum of three years experience in Capacity Building activities are encouraged to apply. Preference will be given to candidates with strong interpersonal, statistical analysis and report writing skills.

**2. Secretary**
Selected candidate will be responsible for providing Secretarial, Office Management and logistical/financial service support to project staff. Will also contribute to budget preparation, expenditure monitoring and assisting the staff in budgeting and preparation of financial reports. A positive attitude to hard work and ability to handle a multiplicity of tasks is an advantage.

G.C.E (A/L) in four subjects With experience in office management or secretarial studies or with relevant qualifications in finance together with computer literacy and minimum of 2 years experience are encouraged to apply.

**General**
1. Salaries and fringe benefits are competitive, and Commensurate with qualifications and experience.
2. Selected candidate will be on contract basis.
3. This Position is based in Puthukudiruppu.

Please send CV (with contact telephone numbers) and names of two non-related referees within seven days of this advertisement.

All applications will be treated in strict confidence. We thank all applicants, but only individuals who are short-listed will be contacted. Applications may be hand delivered to our office in Puthukudiruppu.

Women are encouraged to apply.

**Director Human Resources**
**CARE INTERNATIONAL - SRILANKA**
**7/A, Gregory's Road,**
**Colombo - 7.** (C/29943)


## உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,செப்.3

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

**15 வயதுப் பிரிவு**

★ ஏழாலை மகா வித்தியாலயம் எதிர் குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்.

★ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் எதிர் ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்.

**16 வயதுப் பிரிவு**

★ இணுவில் மத்தியகல்லூரி எதிர் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயம்.

★ கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் சுன்னாகம் மயிலணி மகா வித்தியாலயம். (ம-86)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**பட்டப்பின் படிப்புகள் பீடம்**
**பட்டப்பின் கல்வித்தகைமைக் கற்கைநெறி**
**முழுநேரம் - 2003/2004**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

மேற்படி கற்கைநெறிக்கு யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தனியார் மற்றும் அரசஉதவி பெறும் தனியார் பாடசாலைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி:- 17.09.2003

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.
02.09.2003. (C/29940) (13-16)


## தாச்சிச் சுற்றுப்போட்டி

வலி.வடக்கு,செப்.3

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் கலாஜோதி விளையாட்டுக்கழகம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கலாஜோதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இணுவில் இந்து விளையாட்டுக்கழகமும் உடுவில் இந்து விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

(ம-86)


சகலவிதமான வாகனங்களையும் சிறந்த முறையில் செலுத்துவதற்கு குறுகிய காலப் பயிற்சியுடன் லைசென்ஸ் பெற்றுத் தருபவர்கள்

**பிள்ளை-ஆர் லேணோர்ஸ்**

L **239, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.** L
(Dr. பிலிப் நர்சிங் ஹோமுக்கு முன்னால்)
**தொலைபேசி: 2225844**

*சட்டரீதியான அங்கீகாரம்! காப்புறுதி செய்யப்பட்ட வாகனங்கள்! 20 வருட அனுபவமிக்க பயிற்சியாளர்! எழுத்துப் பரீட்சையை வெல்ல இலகுவான வழிகாட்டி! செய்முறைப் பரீட்சையை இலகுவாக்கும் சிறந்த பயிற்சி!*

முதலில் பதிவு செய்யும் 25 பேருக்கு 20% வதூல் கழிவு வழங்கப்படும்


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியையான
செல்வி நி.மஞ்சுளா அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி நித்தியானந்தன் கிரிஜாசக்தி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
(22155) (25-13-16) யா/சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயம்.

## மரண அறிவித்தல்

### துரைச்சாமி மார்க்கண்டு

(ஓய்வுபெற்ற அதிபர், பணிப்புலம், அ.மி.த.க.பாடசாலை)

பண்டத்தரிப்பு, பணிப்புலத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி மார்க்கண்டு அவர்கள் 27.08.2003 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமி - மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும் புஸ்பவதியின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2003) புதன்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பணிப்புலம்,*
*பண்டத்தரிப்பு.* (22156) (13-16)

தகவல்:
பா.தவக்குமார்.


யாழ்ப்பாண மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம் "சன்றைஸ் மெடி கிளினிக்"

**யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள் அனைவரையும் செனலிங் செய்யலாம்**

- பொது வைத்திய நிபுணர்கள்
- சத்திரசிகிச்சை நிபுணர்கள்
- கண் வைத்திய நிபுணர்கள்
- மகப்பேற்றியல் பெண்நோயியல் நிபுணர்கள்
- என்பு முறிவு நெரிவு சிகிச்சை நிபுணர்கள்
- குழந்தை வைத்திய நிபுணர்கள்
- தோல் வைத்திய நிபுணர்
- பல் வைத்தியர்

MBBS வைத்தியர்களின் வெளி நோயாளர் பிரிவு (OPD) காலை 9.00 மணி- மாலை 7.30 மணி வரை

வீட்டில் இருந்து கொண்டே வைத்தியர்களை Booking செய்ய 222 6069

தனியார் மருத்துவ துறையில் ஒரு புதிய ஆரம்பம்

சாதாரண மக்களும் பயனடையும். வண்ணம் நியாயமான கட்டணத்தில் நிபுணத்துவ ஆலோசனை

*கணனி மயமான ஆய்வுகூட சேவை
*Xray /ECG
*கிளினிக் சேவைகள்

நீரிழிவு, இரத்த அழுத்தம், ஆஸ்த்துமா என்பவற்றைக் கண்காணிப்பதற்கு விசேடமாக குறைக்கப்பட்ட கட்டணத்தில் கிளினிக் சேவைகள்

*நவீன வசதியுடன் பற்சிகிச்சை பிரிவு
*உடற்பயிற்சி (Physiotheraphy

அதிநவீன திறன் கொண்ட எக்ஸ்ரே ஈசிஜி இயந்திரங்கள் உயர் தொழில் நுட்ப வசதி கொண்ட ஆய்வு கூடமும்

**வருமுன் காப்போம்-திட்டத்தின் கீழ் உங்களைப் பூரண மருத்துவ ஆய்வுக்குட்படுத்தி ஆலோசனைகள் வழங்க வசதிகள்**
**(Full Body Medical Check Up)**

*கார்பெட்தரை விரிப்பு கொண்ட நோயாளர் இருக்கை மண்டபம்.
*குளிர்மையான காற்றோட்ட வசதி

இவை யாவும் நகரத்தின் மத்தியில் 388, ஆஸ்பத்திரி வீதியில்-பஸ் நிலையம் வைரவர் கோயில் முன்பாக. யாழ் பேபி நீட்ஸ், இரட்னம் பார்மசி அருகில்

**SUN RISE MEDI CLINIC சன்றைஸ் மெடி கிளினிக்**

# புதிய திட்டத்தின்கீழ் நஷ்ட ஈடு வேண்டும் காங்கேசன் ஊழியர் 152 பேர் போராட்டம்

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தனித்தனி மகஜர்கள் சமர்ப்பிப்பு

ஆள்குறைப்பு என்ற அடிப்படையில் வேலையில் இருந்து நீக்கப்பட்ட காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்கள் 152 பேர் தமக்கு புதிதாக வெளியிடப்பட்டுள்ள நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுத் திட்டத்தின் கீழ் நஷ்ட ஈடு வழங்கவேண்டுமெனக் கோரி மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பதிகாரியிடம் நேற்று தனித்தனி மகஜர்களைச் சமர்ப்பித்தனர்.

இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கும் அவர்கள் இது தொடர்பான மகஜர்களை அனுப்பிவைத்துள்ளனர்.

கட்டாய ஆள்குறைப்பு என்ற ரீதியில் தாம் பணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதையும், பழைய நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு அடிப்படையில் தமக்கான காசோலைகள் தமது வீடுகளுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பியுள்ளதையும் அவர்கள் எதிர்த்துள்ளனர்.

"நாம் சுயவிருப்பின் கீழ் ஓய்வு பெறுவதாயின் தற்போது எமக்கு அனுப்பப்பட்டுள்ள நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுத் திட்ட அளவை எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது. சுயவிருப்பின்கீழ் ஓய்வுபெறுபவர்களுக்கென இறுதியாக அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்ட பெறுமதி கூடிய பொதி திறைசேரியின் செயலாளர் மூலம் நாட்டில் உள்ள சகல கூட்டுத்தாபனங்களிற்கும் அனுப்பப்பட்டுள்ளதையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.



காங்கேசன் சிமெந்து ஊழியர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலரிடம் மகஜர்களை கையளிக்கின்றனர்.

"எனவே, இவற்றைக் கருத்திற்கொண்டு எமக்கு அனுப்பியுள்ள நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவிற்குச் சமமான, அதேயளவு நிதியை மேலதிகமாகக் கூட்டுத்தாபன நிதியிலிருந்து வழங்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்" - என இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனத் தலைவருக்கு ஊழியர்கள் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.(ம-8)

## சாவகச்சேரி பகுதி பொலீஸார் ரோந்து நடவடிக்கை

தென்மராட்சி,செப்.3

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் இரவு வேளைகளில் பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்துவோர் மீது நடவடிக்கை மேற்கொள்வதற்காக சாவகச்சேரி பொலீஸார் இரவு ரோந்துப் பணியினை நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்துள்ளனர்.

கண்டிவீதி, டச்சு வீதி, கச்சாய் வீதி ஆகிய வீதிகளில் சைக்கிள்களிலும் நடந்தும் அவர்கள் ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். சாவகச்சேரி சந்தியிலும் தற்போது பொலீஸார் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

நகர்ப்பகுதியில் இடம்பெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் விதத்திலேயே பொலீஸார் இந்த நடவடிக்கையை மேற் கொண்டுள்ளதாகப் பொலீஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஏ.எரிக் றோசித் தெரிவித்தார்.

(ம-117)

# எதிர்வரும் மாதங்களில் நாட்டில் பெரும் மாற்றமொன்று நிகழும்!

## அநுர பண்டாரநாயக்க ஹேஷ்யம்

கொழும்பு,செப்.3

எதிர்வரும் மாதங்களில் பெரும் மாற்றமொன்று நிகழும் எனவும் அதைத் தடுக்க எந்த ஒரு கொம்பனாலும் முடியாது எனவும் ஜனாதிபதியின் ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர பண்டாரநாயக்க கூறுகிறார்.

தனது அரசியல் வாழ்க்கையின் 27 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு அத்தனகல்ல ரஜமகா விகாரையில் நடைபெற்ற ஒரு சமய நிகழ்ச்சியின் போதே அவர் இதனைக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

அநுர பண்டாரநாயக்க அங்கு மேலும் கூறுகையில், நாடு மிகவும் பயங்கரமான ஒரு நிலையை அடைந்திருக்கிறது. அந்த நிலையிலிருந்து நாட்டைக் காக்க இம்மாற்றம் கட்டாயம் நடைபெறவேண்டும்.

ஐ.தே.க. எதிர்ப்புச் சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டி இந்த நாட்டைப் பாதுகாக்க ஜனாதிபதி தலைமையிலான சுதந்திரக்கட்சி நடவடிக்கை மேற்கொள்ளும். அதுவும் நிச்சயம்.

எனக்கும் மஹிந்தராஜபக்ஷவுக்கும் இடையில் எதுவும் இல்லை. இல்லாத பிரச்சினையை உருவாக்க அரசுப் பத்திரிகைகள் முயற்சி மேற்கொள்கின்றன -என்றார்.

### மருத்துவ முகாம்

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை இலவச கண்சிகிச்சை முகாம் ஒன்று இடம்பெறவுள்ளது.

மாணவர்களுக்காக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள இந்த நிகழ்வு பிரதிபிராந்தியப் பணிப்பாளர் நயோகராஜன் தலைமையில் நடைபெறும்.

# உள்ளே ஒளிந்திருக்கும் உன்னதத்தை வெளியே கொண்டுவர வெறி கொள்க!

## இளைஞர்களுக்கு கேலிச்சித்திரக் கலைஞர் அழைப்பு

கொழும்பு,செப்.3

ஒவ்வோர் இளைஞனும் தனக்குள் மறைந்திருக்கும் திறமையை வெளிப்படுத்த முயற்சிக்கவேண்டும். அப்படி முயற்சிப்பதன் மூலம்தான் அவனுக்கும் நாட்டுக்கும் பெருமையைத் தேடித்தர முடியும்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றிய இலங்கையின் பிரபல கேலிச்சித்திரக்காரரான சரத் செனவிரட்ன இவ்வாறு தெரிவித்தார்.

'டிஜிடல் பேஸ்' நிறுவனம் இக் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது.

தொழில்நுட்பத்தின் மூலம் உருவாக்கப்பட்ட பல நவீன சாதனங்கள் அங்கு காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன.

சரத் செனவிரட்ன அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தாவது-

இலங்கையில் திறமையான கேலிச் சித்திரக்காரர்களே கிடையாது. மேற்கு நாடுகளில் 36 வருடங்கள் என் வாழ்க்கை கழிந்திருக்கிறது. உலகின் கவனத்தைக் கவரக்கூடிய திறமையான கேலிச் சித்திரக் காரர்களை நான் சந்தித்திருக்கின்றேன். நமக்கேன் இந்தத் திறமை இல்லாமல் போனது?

நமக்குள் மறைந்துகிடைக்கும் திறமைகளை நாம் வெளிக்கொணர முயற்சிப்பதில்லை. திறமையான இளைஞர்கள் இங்கு இருக்கின்றார்கள். அவர்கள் தம் திறமையை வெளிக்காட்ட முன்வரவேண்டும்.

'டிஜிட்டல் பேஸ் நிறுவனத்துடன் எனக்கு மிக நெருங்கிய தொடர்பு உண்டு. மிகவும் திறமைவாய்ந்த இளைஞர்கள் இந்த நிறுவனத்தில் இருக்கின்றார்கள். தொழில்நுட்பவியலின் மூலம் உன்னதமான உலகை அவர்கள் படைக்க முயற்சிக்கிறார்கள்; வெற்றியும் அடைந்திருக்கிறார்கள்.

இளம் வயதிலேயே கேலிச் சித்திரத்திற்காக பேனாவை நான் உயர்த்திப் பிடிக்கவில்லை, தாழ்த்தித்தான் பிடித்தேன். எனது கோடுகளின் மூலம் அரசியல்வாதிகளின் தலைவிதியை நிர்ணயித்தேன்.

- இவ்வாறு செனவிரட்ன தெரிவித்தார்.

# கங்கு மட்டை தும்புகள் ஜப்பானுக்கு ஏற்றுமதி!

யாழ்ப்பாணம்,செப்.3

பனையின் கங்குமட்டையில் இருந்து பெறப்படும் தும்புகள் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளது.

குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் இந்த கங்கு மட்டைத் தும்புகள் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது இதுவே முதன்முறை என்று தெரிவிக்கப்படுகின்றது.

'யூரோவில்' முதலீட்டு நிறுவனம் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் யாழ். மாவட்ட நிதி முகாமையாளர் வி.நிரஞ்சன் தெரிவித்தார்.

தேங்காய் பொச்சு மட்டைகள் மற்றும் தெங்கு, பனம் உற்பத்திப் பொருள்கள் என்பனவே இதுவரை குடாநாட்டில் இருந்து தென்பகுதிக்கும் இந்தியா, இந்தோனேஷியா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

எனினும், இந்த ஏற்றுமதி நடவடிக்கைகள்கூட சரியாகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதில்லை.

இந்த நிலையிலேயே கங்குமட்டைத் தும்புகளை ஏற்றுமதி செய்வதற்கு 'யூரோவில்' நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

முதலில் கங்கு மட்டைத் தும்புகள் மட்டுமே ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளன. அதிலிருந்து அங்கு பொருள்கள் தயாரிக்கப்படவுள்ளன. எதிர்காலத்தில் அந்தப் பொருள்களை இங்கேயே உற்பத்திசெய்து அவற்றை ஏற்றுமதி செய்வதற்கும் 'யூரோவில்' நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

சேங்காய் தும்பு பொச்சுக்களை விட கங்குமட்டை தும்பு உறுதியானதாக இருப்பதால் இவற்றுக்கு ஜப்பானிய கைத்தொழிலாளர்கள் மத்தியில் ஏகப்பட்ட கிராக்கி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ம-12)



'யூரோவில்' நிறுவன தொழிற்சாலையில் ஊழியர் ஒருவர் கங்குமட்டை தும்பை துப்புரவு செய்கிறார்.

# யூனியன் கல்லூரி அம்மன் சிலைகளை பிரதிஷ்டை செய்யமுடியாத நிலைமை

## படையினரின் தடை காரணமாம்

யாழ்ப்பாணம்,செப்.3

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் பிரதிஷ்டை செய்யவென எடுத்துவரப்பட்ட அம்மன் விக்கிரகங்கள் கடந்த 10 மாதங்களாக தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலய திருமுறை மண்டபத்தில் முடங்கிக் கிடக்கின்றன.

பாடசாலை வளாகத்தினுலுள்ள ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யவென பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் ஒருவரினால் இச்சிலைகள் பாடசாலைக்கு வழங்கப்பட்டிருந்தன.

பாடசாலையின் இந்து மாமன்ற மாணவர்கள் இச்சிலையை ஆலயவளாகத்தினுள் நிர்மாணிக்க எடுத்த முயற்சி பாடசாலை நிர்வாகத்தினால் தடுக்கப்பட்டதாக இந்துமாமன்ற பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

ஆலய வளாகத்தினுள் அச்சிலைகளை எடுத்துச்செல்வதற்கு இராணுவத்தினர் தடைவிதித்துள்ளமையே நிர்வாகத்தின் இந்த நிலைப்பாட்டுக்கு காரணமென பாடசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேநேரம், இராணுவத்தினர் பாடசாலை வளாக எல்லையில் புத்தர் சிலையை நிறுவி வழிபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.(ம-86)

# பனைமரம் முறிந்து வீழ்ந்து மின்விநியோகம் தடைப்பட்டது

## குப்பிளான் வடக்கில் சம்பவம்

தெல்லிப்பழை,செப்.3

குப்பிளான் வடக்கு பகுதியில் பனைமரம் முறிந்து மின் விநியோகக் கம்பிகளின்மீது வீழ்ந்ததால் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

கடந்த 31ஆம் திகதியன்று மதியம் பனைமரம் முறிந்து விழுந்து மின்சாரக் கம்பிகளை அறுத்தெறிந்ததுடன் மின்கம்பம் ஒன்றையும் முறிந்து வீழ்த்தியது. இதனால் கடந்த நான்கு தினங்களாக இப்பகுதிக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

நேற்று மின் விநியோக கம்பிகளைச் சீர்செய்யும் பணியில் மின்சார சபை ஊழியர்கள் ஈடுபட்டனர்.

(ம-150)

### அங்குரார்ப்பண விழா

யாழ்ப்பாணம்,செப்.3

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பவள விழாவையொட்டிய அங்குரார்ப்பண விழா இன்று புதனகிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ம-6)

# கணனி பயிற்சி நிலையம் அரியாலையில் திறப்பு

வலி.வடக்கு,செப்.3

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கு கணனிப் பயிற்சி வழங்குவதற்கான பயிற்சி நிலையம் ஒன்று இன்று புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் திறந்துவைக்கப்படவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலாளர் வி.வி. முருகையா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் கலந்துகொள்ளவுள்ளார்.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் மனிதவள அபிவிருத்தி திட்டத்தின்கீழ் இப்பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 30 பேர் இங்கு பயிற்சி பெறுவதற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ம-86)

# தேசிய அரசு மூலம் ஹிட்லரை தோற்கடித்த வின்சன்ட் சேர்ச்சில்

**ஒரு நாட்டில் நிலவும் முக்கியமான பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாத நிலையில் தேசிய அரசு ஒன்றை உருவாக்கி அப்பிரச்சினைக்கு பிரிட்டிஷ் அரசு எவ்வாறு தீர்வு கண்டது என்பது குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது. அவ்வாறான ஒரு நிகழ்வு எமது நாட்டிலும் இடம்பெறுமா என்பது சந்தேகமே.**

முதலாம் உலக யுத்த காலத்தை விட இரண்டாம் உலக யுத்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு பல திரைப்படங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவ்வாறான ஒரு திரைப்படம் தொடர்பான சுவரொட்டி விளம்பரத்தில் கீழ் கண்ட விநோதமான வாசகம் காணப்பட்டது.

"வீர புருஷர்கள் எனப்படுவோர் சாதாரண மனிதர்களே. சாதாரண மனிதர்கள் அசாதாரண சூழ்நிலையை எதிர்கொண்டு தாம் மேற்கொள்ளும் தீரம்மிக்க செயல்கள் மூலமே அவர்கள் வீர புருஷர்களாகக் கணிக்கப்படுகின்றனர்".

உண்மையில் இரண்டாம் உலக யுததமும் அசாதாரணதொரு சூழ்நிலையாலேயே ஆரம்பிக்கப்பட்டது. அந்த அசாதாரண சூழ்நிலையை எதிர்கொள்ளும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட அசாதாரண நடவடிக்கைகள் காரணமாகவே யுத்தம் இரண்டாம் உலக யுத்தமாக விரிவடைந்தது. இதன் பயனாக இரண்டாம் உலக யுத்தத்தை தலைமை தாங்கி வழிநடத்திய வீர புருஷர்களின் வரலாறும் வியாபித்தது. "வரலாற்றின் மூலம் வீர புருஷர்கள் உருவாக்கப்படுகின்றனர். அல்லது வரலாறு வீர புருஷர்களை உருவாக்குகின்றது" எனக் ஹிட்லர் ஒரு சமயம் கூறியிருந்தார். ஆனால், ஹிட்லரினால் ஒரு வரலாறே படைக்கப்பட்டது என இன்றும் வரலாற்று ஆசிரியர்கள் நம்புகின்றனர். வரலாறு ஒன்றைப் படைக்கும் நோக்கில் இரண்டாம் உலக யுத்தத்தை ஆரம்பித்த ஹிட்லர் ஒரு கெட்டவனாக வரலாற்றில் சித்திரிக்கப்பட்ட போதிலும், இரண்டாம் உலக யுத்தமானது வீர புருஷர்களோ அல்லது கெட்டவர்களோ அற்றதொரு கதைககு ஒப்பானது என வரலாற்று ஆசிரியர்கள் வாதிடுகின்றனர். இருந்தபோதும், ஹிட்லர் ஆரம்பித்து வைத்த இரண்டாம் உலக யுத்தத்தின் மூலம் வீர புருஷர் ஒருவரையும் அவர் வரலாற்றுக்கு உருவாக்கித் தந்துள்ளார். ஹிட்லரால் உருவாக்கப்பட்ட அவ் வீர புருஷர் வரலாற்றில் ஹிட்லரையே ஒரு கெட்டவனாக சித்திரித்துக் காட்டினார். அவர் வேறு யாரும் அல்லர். பிரிட்டனின் முன்னாள் பிரதமர் வின்சன்ட் சேர்ச்சிலே அவ்வீரபுருஷர் ஆவார். ஹிட்லர் என்ற விசித்திர மனிதரால் உருவாக்கப்பட்ட அசாதாரண சூழ்நிலைக்கு முகம்கொடுக்க அசாதாரணமானதொரு வகையில் அதனை எதிர்கொண்டு செயற்பட்டதன் காரணமாக வரலாற்றில் சேர்ச்சில் ஒரு வீர புருஷராகக் கணிக்கப்பட்டார்.

ஒரு நாளின் 24மணி நேரத்தில் குறைந்தது எட்டு மணிநேரம் பெரும் குடிகாரனைப்போல் குடியில் மூழ்கிக்கிடக்கும் உருப்படியாக எதனையும்செய்யத் தெரியாத ஒழுக்கமற்றவன்றி எனக் ஹிட்லரால் வர்ணிக்கப்பட்ட பிரமுகரே சேர்ச்சில் ஆவார். ஆயினும் அப்போதைய பிரித்தானிய அரசின் அமைச்சரான சேம்பர்லைன் முன்னுக்குவரக்கூடிய பொருத்தமான அரசியல்வாதியென சேர்ச்சிலைப் பற்றிக் கணிப்பிட்டிருந்தார். அவ்விதம் எண்ணியிருந்தது மட்டுமன்றி அவர் சேர்ச்சிலை முன்னிலைக்கும் கொண்டு வந்தார். 1900 ஆம் ஆண்டு முதல் கன்ஷர்வேட்டிக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சேர்ச்சிலை அமைச்சர் பதவியளித்து முன்னுக்குக்கொண்டு வந்த சேம்பர்லைன் செக்கோசிலாவாக்கியா நாட்டைத் தம்மிடம் கையளிக்குமாறு கோரி உலகை அச்சுறுத்திய ஹிட்லரைச் சந்திக்கையில் ஒலிவ் மரக்கிளையொன்றை தாங்கியவாறு ஜேர்மனியின் 'மியூனிச் நகரத்துக்குச் சென்றார். எப்போதும் சமாதானத்தின் அவசியத்தை வலியுறுத்தும் நோக்கத்திலேயே அவ்விதம் 'ஒலிவ்' மரக்கிளையைத் தாங்கிச் சென்றார். கர்ப்பிணிப் பெண்ணின் மசக்கை விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதுபோல பிரிட்டனின் பாதுகாப்புக்கு முக்கியமானதாக அமைந்த செக்கோசிலாவாக்கியா நாட்டைக் ஹிட்லிடம் கையளிக்கும் பொருட்டே அவர் ஜேர்மனிக்குச் சென்றார். அவரது இச்செய்கையை சேர்ச்சில் விரும்பாதபோதிலும் நடப்பவற்றை அமைதியாகக் கவனித்தவாறிருந்தார். மாடொன்று ஆவலுடன் நோக்கினால் அதுதான் காணும் தென்னம் நாற்றை உண்ண விளைகிறது என்பதைச் சேர்ச்சில் நன்கறிவார். ஆனால், சேம்பர்லைன் சேர்ச்சிலின் எதிர்ப்புணர்வை சிறிதளவும் பொருட்படுத்தினாரில்லை.

ஜேர்மனி சென்று ஹிட்லரைச் சநதித்து உடன்பாடொன்றைச் செய்து கொண்ட பின்னர் பெரும் சாதனையொன்றை நிகழ்த்தியவர் போன்று பிரித்தானியாவில் காலடி எடுத்து வைத்தார். வழியின் இருபுறமும் திரண்டிருந்த பொதுமக்களிடம் தான் ஹிட்லருடன் மேற்கொண்ட ஒப்பந்தப் பிரதிகளைக் காட்டி 'நான் அதனை எப்படியோ காப்பாற்றிக்கொண்டு வந்து விட்டேன்' என்பது போல மகிழ்ச்சிக் கூச்சலிட்டார். இதைக்கண்ட சேர்ச்சிலால் சிரிக்க மட்டுந்தான் முடிந்தது.

"முழு ஐரோப்பாவையும் ஹிட்லர் விரட்டும் நாள் வெகு விரைவில் வரப்போகிறது" எனக் கூறிய சேர்ச்சிலை பார்வையுள்ளோர் மத்தியில் உள்ளதொரு குருடனைப் பார்ப்பது போன்று சேம்பர்லைனது அமைச்சரவைச் சகாக்கள் நோக்கினர். 1934 ஆம் ஆண்டில் வேறொரு சந்தர்ப்பத்தில் ஹிட்லரைச் சந்தித்த அமைச்சர் அன்ரனி ஈடின், ஹிட்லரின் குண இயல்பு குறித்துக் கூறுகையில், "ஹிட்லர் ஒரு புதுமையான மனிதராவார். கணவன், மனைவியரின் சந்திப்பின் போதான அமைதி, அடக்கம் மற்றும் கூச்சத்தன்மை அனைத்தும் ஒருங்கே கொண்டது போன்ற மனிதனாகத் தன்னை வெளிக்காட்டுவது போன்றதொரு புன்சிரிப்பால் மற்றவர்களை ஆகர்ஷிக்கும் நபராவார். சந்தேகமில்லாமல் ஹிட்லர் மனிதர்களை வசீகரிக்கும் சக்தி படைத்தவரே" எனத் தெரிவித்திருந்தார்.

## வியெஸ்ரி

அன்ரனி ஈடினது இக்கருத்தை கூறிய சேர்ச்சில் தன் முன்னால் அமர்ந்திருந்தவர்களை குருடர்கள் கூட்டத்தை நோக்குவது போன்று ஏளனமாக நோக்கினார். இதனாலேயே அடிக்கடி அவர் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் கீழ்க்காணும் கருத்தை வலியுறுத்திப் பேசிவந்தார்.

"எமக்குத் தற்போது அவதானம் அவசியமாகும். அப்பலம் வாய்ந்த எதேச்சதிகாரி மேலும் மேலும் பலமடைந்து வருகின்றான். எவ்வித பலனும் எதிர்பாராது எத்தகைய சூழ்நிலையிலும் யுத்தத்தில் ஈடுபடக்கூடிய திறமைமிக்க வீரர்களைத் தன்வசம் கொண்டுள்ள நாடு ஜேர்மனியாகும்"

ஆனால், சேர்ச்சிலது இக் கருத்தை சேம்பர்லைன் சிறிதும் பொருட்படுத்தவில்லை. இருப்பினும் போலந்து நாட்டின் ஒரு பகுதியைத் தம்மிடம் வழங்குமாறு ஹிட்லர் கேட்க ஆரம்பித்த வேளையில் சேமபர்லைன் கடும் ஆத்திரம் அடைந்தார். இதனையே காரணமாகக் கொண்டு ஜேர்மனி மீது போர் தொடுக்க சேம்பர்லைன் ஆயத்தமான வேளையில் ஹிட்டலர் போலந்து நாட்டைக் கைப்பற்றித் தனது நிர்வாகத்தின் கீழ் இணைத்துக் கொண்டார்.

போலந்தைக் கைப்பற்றும் நோக்கத்தில் ஜேர்மனி யுத்தத்தை ஆரம்பிக்குமானால், அதற்கெதிராக பிரித்தானியா யுத்தத்தில் இறங்குமென முன்பொருமுறை சேம்பர்லைன் ஜேர்மனியை மிரட்டியிருந்தார். அந்த மிரட்டல்கள் எதற்கும் அஞ்சாது, ஹிட்லர் போலந்து நாட்டை ஆக்கிரமித்தமையால் சேம்பர்லைனால் எதுவும் செய்யமுடியவில்லை. தாம் சுற்றிவளைக்கப்பட்டு விட்டது போன்றதொரு மன உணர்வில் சேம்பர்லைன் இருந்தார். ஜேர்மனிக்கு எதிராக யுத்தப் பிரகடனம் மேற்கொள்ளுமாறு பிரித்தானிய நாடாளுமன்றம் சேம்பர்லைனை நிர்ப்பந்தித்து வந்ததொரு வேளையில் நாடாளுமன்றத்தின் ஒரு மூலையில் அமர்ந்திருந்து சபை நடவடிக்கைகளைக் கவனித்தவாறிருந்த சேர்ச்சில் தன்னைச் சுதாரித்துக் கொண்டு எழுந்து நின்றார். விலக்கிக்கொள்ளமுடியாத கையை சேர்த்துக் கொள்வதுபோல, தவிர்க்க முடியாத சூழ்நிலைத் தாக்கத்தால் சேர்ச்சிலையும் தனது அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டதோடு, ஜேர்மனிக்கு எதிராக சேம்பர்லைன் யுத்தப் பிரகடனம் மேற்கொண்டார். அந்த வேளையில், ஜேர்மனியப் படைகள் டென்மார்க் நாட்டையும் கைப்பற்றிக் கொண்டபின் தொடர்ந்தும் முன்னேறி நோர்வே நாட்டினுள்ளும் பிரவேசித்திருந்தன. இதனால் நோர்வே நாடு பிரித்தானியாவிடம் படை உதவி கோரி நின்றது. பிரித்தானியா, நோர்வே நாட்டுக்கு உதவும் நோக்கில் தனது படைகளை அனுப்பி ஜேர்மனிக்கு எதிராகப் போரிட்ட போதிலும், தோல்வியையே சந்திக்க நேர்ந்தது. இதனால், நோர்வே நாட்டின் மன்னரையும் தம்முடன் அழைத்துக் கொணடு பிரித்தானிய இராணுவம் நாடு திரும்ப வேண்டி ஏற்பட்டது.



இத்தோல்வி காரணமாகப் பிரித்தானிய நாடாளுமன்றம் சேம்பர்லைனுக்கு எதிராகக் கருத்துத் தெரிவிக்க ஆரம்பித்தது. அவ்வேளையில் எதிர்க்கட்சியாக இயங்கிய தொழிற்கட்சி, நோர்வேச் சம்பவம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டது. அவ்விவாதத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சேம்பர்லைனது நர்வாகம் குறித்து கடுமையாகக் குற்றம் சுமத்திப் பேசினர். சேம்பர்லைனைப் பதவியிலிருந்து அகற்றி யுத்தத்தைத் தொடர்ந்து வழி நடத்திச் செல்லக்கூடியவகையில், சேர்ச்சிலுக்குத் தலைமைத்துவம் வழங்கப்பட வேண்டுமென அவர்களிற் பலர் வற்புறுத்திப் பேசினர். இவ்விவாதமானது தன்னுடையதும், பிரித்தானியா மற்றும் முழு உலகத்தினதும் வரலாற்றை மாற்றியமைக்கப் போகிறோம் என்ற எண்ணம் சேர்ச்சிலின் மனதில் உருவாகக் காரணமாயிற்று. இருப்பினும், அந்த நிலையிலும், சேம்பர்லைனுக்கு எதிரான விதத்தில் செயற்பட சேர்ச்சில் விரும்பாததால் அந்தக் கருத்தை அவர் அடியோடு மறுத்தார். ஆயினும், சேர்சசிலின் இம்முடிவால் சேர்பர்லைனுக்கு எதிராக உருவாகியிருந்த எதிர்ப்புணர்வு சற்றும் தணியவில்லை.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த இளம் உறுப்பினர்கள் ஊர்ந்து, நெளிந்து செல்லும் புழுவொன்றினை நோக்குவதுபோல சேம்பர்லைனை ஏளனப் பார்வையுடன் நோக்கினர். பல யுத்தங்களில் பிரித்தானியக் கடற்படைக்குத் தலைமை தாங்கி வழிநடத்திப் பல வெற்றிகளைக் குவித்தவரான முன்னாள் பிரித்தானிய கடற்படைத்தளபதியும் பின்னாளில் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினராய் பதவி வகித்தவருமான சேர் றோயர் கீஸ் விவாதம் இடம்பெற்ற தினத்தன்று யுத்தச் சீருடையுடன் நாடாளுமன்ற விவாதத்தில கலந்துகொண்டு சேம்பர்லைனை உடனடியாகப் பதவி விலகுமாறு கேட்டுக் கொள்ளுமளவுக்கு சேம்பர்லைனுக்கு எதிரான உணர்வலைகள் நாடாளுமன்றத்தில் உருவாகியிருந்தன. இந்த யுத்தத்தில் இப்படியான நிர்வாகச் சூழ்நிலையில் வெற்றிகொள்ளமுடியாதென பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டினர். அடுத்த நாள் இடம்பெற்ற விவாதத்தின் போது முதலாவது உலக யுத்தத்தின் போது பிரித்தானியப் படைகளுக்குத் தலைமைதாங்கி, யுத்தத்தில் பல வெற்றிகளை ஈட்டிக்கொடுத்த முன்னாள் பிரித்தானியர் பிரதமர் லொயிட் ஜோர்ஜ் பேச எழுந்து நாடாளுமன்றத்தில் அமர்ந்திருந்த சேர்ச்சிலை நோக்கிக் கையைச் சுட்டிக்காட்டி இந்த வேளையில் அரசைக் காப்பாற்றுமாறு வேண்டிக் கொண்டார். இவ்வாறானதொரு சூழ்நிலையில் யாவரும் தியாகம் செய்வதற்குத் தயாராக வேண்டுமெனவும் பிரதமர் கூடத் தன் பதவியைத் தியாகம் செய்வதற்கு முன்வர வேண்டுமெனவும் சேர்ச்சில் தனது பேச்சின் போது குறிப்பிட்டார். சேர்ச்சிலின் இக்கருத்து சேம்பர்லைனை ஆத்திரமடைய வைத்தது. அரசில் அங்கம் வகிப்போரில் பலர் தமக்கு எதிராகத் துரோகம் செய்வதாக அவர் உரத்துச் சத்தமிட ஆரம்பித்தார்.

இருந்தபோதிலும் நாடாளுமன்றத்துள் அவருக்கிருந்த ஆதரவு படிப்படியாகக் குறைந்து சென்றதேயன்றி சிறிதளவேனும் அதிகரிக்கவில்லை. மூன்றாம்நாள் இடம்பெற்ற விவாதத்தின்போது முன்னாள் பிரித்தானிய அமைச்சர்களில் ஒருவரான லியோ எவரி தனது பேச்சின் இறுதியில் சேம்பர்லைனை நோக்கி, "உமது கடமையை நிறைவேற்ற முடியாதுவிட்டால் கடவுளின் பெயரால் வீட்டுக்குச் சென்று விடுங்கள்" எனக் கூறினார். விவாதத்தின் முடிவில் இடம்பெற்ற வாக்கெடுப்பின்போது அரச தரப்புக்கு இருந்த பெரும்பான்மைப்பலம் குறைவடைந்தது. அந்த வேளையில், தேசிய அரசொன்றினை அமைப்பது பற்றிப் பிரஸ்தாபித்த சேம்பர்லைன் அம்முயற்சிக்கு ஆதரவளிக்குமாறு எதிர்க்கட்சியினரைக் கேட்டுக் கொண்டார். சேம்பர்லைன் தலைமையில் அல்லாது வேறு எவரது தலைமையிலும் தேசிய அரசொன்றினை உருவாக்கத் தமது கட்சி தயாராயிருப்பதாக எதிர்க்கட்சியான தொழிற் கட்சி தெரிவித்தது. இதனால் வெட்கமடைந்த சேம்பர்லைன் பிரித்தானிய அரசரைச் சந்தித்துப் பிரதமர் பதவியைத் துறப்பதற்கான தனது விருப்பத்தைத் தெரிவித்தார். அதுமட்டுமன்றி தமக்கு அடுத்த நிலையிருந்த கலிபக்ஸ்ஸாம் என்பவரை புதிய பிரதமராக நியமிக்குமாறும் கேட்டுக் கொண்டார். ஆயினும், சேர்ச்சிலின் உதவியின்றி அவ்வேளையில் எதனையும் செய்ய இயலாதென்பதை அரசர் உணர்ந்து கொண்டார். ஆதலால் கலிபக்ஸ், சேம்பர்லைன் மற்றும் சேர்ச்சில் ஆகியோரை அழைத்து அரசர் கலந்தாலோசித்தார்.

கலிபக்ஸின் கீழ் கடமையாற்றுவதைச் சேர்ச்சில் விரும்பவில்லை என்பதனை உணர்ந்துகொண்ட அரசர் கலிபக்ஸின் இணக்கத்துடன் சேர்ச்சிலைப் பிரதமர் பதவியில் நியமித்ததோடு உதவிப் பிரதமர் பதவியை எதிர்க்கட்சியினருக்கு வழங்கியது மட்டுமன்றி சேம்பர்லைனை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் சாம் பதவிக்கு நியமித்து தேசிய அரசு ஒன்றை உருவாக்கினார்

ஒரு நாளின் எட்டு மணி நேரத்தை குடிகாரன்போல் செலவிடும் பன்றி எனக் ஹிட்லரால் விமர்சிக்கப்பட்ட சேர்ச்சில், பிரதமராகப் பதவியேற்றதும் ஹிட்லருக்கு எதிராகத் தன் திறமை அனைத்தையும் வெளிப்படுத்தும் வகையில் செயற்பட்டார். சேர்ச்சில் தனக்கெதிராக இவ்விதம் இயங்குவதற்குக் காரணம் பழைய விரோதமேயன்றி வேறேதுவும் இருக்கமுடியாதெனக் ஹிட்லர் பின்னர் குறிப்பிட்டதும் இதனாலேயேயாகும்.

இந்த யுத்தத்தில் பிரித்தானியா தோல்வியுற நேர்ந்தால் உலகத்து மற்ற நாடுகள் மத்தியில் பிரித்தானியா வகித்து வந்த கௌரவத்தை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு, பிரித்தானியாவினுள்ளேயே ஒரு ஹிட்லரைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கும் என கூறிக்கொண்டே சேர்ச்சில் தனது யுத்த நடவடிக்கைகளை ஆரம்பித்தார்.

இந்த வகையில்தான் இரண்டாம் உலகப் யுத்தத்தில் முதலாவது வீர புருஷர் ஒருவர் உருவாக்கப்பட்டார். இருந்தபோதும், அவர் மட்டுமே வீர புருஷர் என்பது அர்த்தமல்ல. இரண்டாம் உலக யுத்தம் வேறும் பல வீர புருஷர்களை உருவாக்கித் தந்துள்ளது. வீர புருஷர்களை மட்டுமல்ல இன்று நாம் வாழும் உலகினையும் உருவாக்கியது. இரண்டாம் உலக யுத்தமே. ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கி மற்றும் சர்வதேச முதலீட்டு நிதியம் ஆகியவைகள் உருவாக அடிப்படையாக அமைந்து இரண்டாம் உலக யுத்தமேயாகும். இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பமாகும் வரை, மாற்றமுடியாத நிலையில் இருந்த இந்த உலகத்தையும், இந்த உலகில் வாழ்ந்த வீர புருஷர்களையும் உலகத்தின கண்களுக்குக் காட்டித் தந்த பெருமை இரண்டாம் உலக யுத்தத்தையே சாரும். இவை பற்றிப் பேசப்பேச அவை புதிய அனுபவங்களாகவே தோன்றும். இரண்டாம் உலக யுத்த நிகழ்வுகள், சம்பவங்கள் பற்றி தனித்தனியாக ஆழ்ந்து நோக்குவோமானால் அவை புதுப்புது உணர்வுகளை நம் மனதில் தோற்றுவிக்கும். ★




சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான பெண்பிள்ளைகள் கருத்தரங்கு நேற்றும் நேற்றுமுன்தினமும் 'யுனிசெவ்' ஆதரவுடன் கொழும்பில் இருந்து வருகைதந்த பெண் சாரணிய பயிற்றுநர்களால் யாழ். திருக்குடும்பக் கன்னியர்மட பெண்கள் பாடசாலையில் நடத்தப்பட்டது. இந்தக் கருத்தரங்கிற்கு யாழ். மாவட்டத்தில் உள்ள நான்கு வலயங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 15 பாடசாலைகளின் மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

நேற்றுமுன்தினம் மாணவர்களும் நேற்று பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கில் கலந்துகொண்ட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டமையையும் கருத்தரங்கை நடத்திய பெண்சாரணிய திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பிரியந்தி ராஜபக்ஷ, யாழ். மாவட்ட ஆணையாளர் சிவராஜா, களுத்துறை மாவட்ட ஆணையாளர் துஷினி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: அலுவலக செய்தியாளர்)*

இன்று 03.09.2003 இல்
அறுபதாம் ஆண்டு அகவையில்
அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்!

யாழ்ப்பாணம், நாச்சிமார்கோயிலடி
திரு.நா.குணரத்தினம் - திருமதி கு.நகுலேஸ்வரி
தம்பதிகள்
இன்றுபோல் என்றும் நலமுடன் வாழ நாம் உளமார
வாழ்த்துகின்றோம்.

வெல்கம் புடைவைக்கடை,
978, K.K.S. வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம். (22164) (18-16-29)

-குணசேகர் மதிவதனராணி
-ஜீவகாந்தன் குணேஸ்வரி
-பிறேமதாஸ் சசிகலா
பேரப்பிள்ளைகள்.



10ஆவது பிறந்தநாள் வாழ்த்து



HAPPY BIRTHDAY

03 - 09 - 2003

செல்வி
கந்தசாமி தாட்சாயினி

நயினாதீவைச் சேர்ந்த
கந்தசாமி இரத்தினேஸ்வரி
தம்பதிகளின் தவப்புதல்வி
தாட்சாயினி தனது
10ஆவது பிறந்தநாளை
இன்று அவரது இல்லத்தில்
குதூகலமாக
கொண்டாடுகிறார்.

தாட்சாயினியை அப்பா, அம்மா, அப்பம்மா, அத்தைமார்கள், மாமாமார்கள், மாமிமார்கள் கோண்டாவிலில் வசிக்கும் ஐயா, மாமா, மாமி, மச்சான்மார் சங்குவேலியில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, திருமலையில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அக்கா, அண்ணா ஜேர்மனியில் வசிக்கும் மாமாமார், மாமிமார், மச்சான் பிரான்சில் வசிக்கும் மாமா,மாமி, மச்சான்மார், மச்சாள்மார் துபாயில் வசிக்கும் அத்தை, மாமா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் நயினாதீவு அம்பாள் அருள்பெற்று சகல கலைகளும் கற்று சிறப்புற வாழ வாழ்த்துகிறார்கள்.

நயினாதீவு. (C29951) (32-18-13-29) அப்பா, அம்மா.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில்
11 - 07 - 1934



விண்ணில்
04 - 08 - 2003

## திருமதி அன்னபூரணம் கந்தையா

"அன்பின் திருவுருவாய் ஆரருளின் கொள்கலனாய்
பண்பின் உறைவிடமாய் பாசத்தின் விளைநிலமாய்
இன்பத்தின் இருப்பிடமாய் எம்மை வளர்த்து வந்தாய்
கல்வி அறிவூட்டினாய் பொருள் தேடும் வழிகாட்டினாய்
நன்றாய் நாம்வாழ கூடநின்று வழிசமைப்பாய்
என்றே நாமிருக்க எமை விடுத்தே எங்கு சென்றாய்?
உன்தன் இழப்பை ஈடுசெய்ய இயலாமல் தவிக்கிறோம்"

யாழ்ப்பாணம், கைதடி வடக்கைச் சேர்ந்த அமரர் திருமதி அன்னபூரணம் கந்தையா அவர்கள் கடந்த 04-08-2003 அன்று இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து செய்வதறியாது திகைத்து நின்ற வேளை எம் இல்லம் நாடி வந்து பற்பல உதவிகள் நல்கியோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து எம்துயரில் பங்கு கொண்டோருக்கும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்தும், தொலைபேசி ஊடாகவும், தபால் மூலமாகவும், தந்திவாயிலாகவும் தம் துயர்பகிர்ந்து கொண்டோருக்கும் மேலும் சிரமம் பாராது, நேரம் பாராது தோளோடு தோள் நின்று பற்பல உதவிகளை நல்கிய உள்ளூர் உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு, இன்று (03-09-2003) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் பகல் 10.00 மணியளவில் நடைபெறும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய, ஆன்மா ஈடேற்றக்கிரியை நிகழ்வுகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு மிக்க அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

ஓம் சாந்தி!

அன்னாரின் பிரிவால் வாடும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்


"குககிரி"
கைதடி கிழக்கு,
கைதடி.

தகவல்:- க.குருபரன் (மகன்)
0777 - 768164.

(22157) (32-18-16-29)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்

பிறப்பு
03 - 04 - 1935



உதிர்வு
02 - 08 - 2003

## அமரர் இளையதம்பி பாலசிங்கம்

அன்பின் திருவுருவாய் பாசத்தின்
சிகரமாய் நின்று
எம்மைத் தரணியிலே தலை நிமர
வைத்தீர்கள்
நாம் ஆலமரமாய் வளர
ஆணிவேராய் நின்றீர்கள்-இன்று
வேரிழந்து நிற்கின்றோம் உங்கள்
நினைவுகளை சுமந்தபடி.

02.08.2003 அன்று கனடாவில் இறைவனடி எய்திய எம் அன்புத் தந்தையின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (03.09.2003) புதன்கிழமை நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

-குடும்பத்தினர்.

197A, பொற்பதி வீதி,
கோண்டாவில். (22179) (32)

## யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

### கலைப்பீடம்

### இராமநாதன் நுண்கலைக்கழகப் பரீட்சைகள் (இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்)

இரண்டாம், மூன்றாம் வருட- இரண்டாம் அரையாண்டு செய்முறைப் பரீட்சைகள் 12.09.2003 ஆம் திகதியன்று ஆரம்பமாகின்றன.

நான்காம் வருட நுண்கலைமாணி/நுண்கலைமணி' (இசை, நடனம்) ஆற்றுகைப் பரீட்சைகள் 04.09.2003 ஆம் திகதியன்று ஆரம்பமாகின்றன.

பதிவாளர்,
02.09.2003.

(C/29945) (29-16)


லஷ்சுமி சினிமா
இணுவில்
முரளி, தேவயானி, வடிவேல் நடித்த
காதலுடன்
(ரீல்ஸ்)
காட்சி நேரம் 11.00, 3.00, 7.00 (புதிய நேரம்).

நாகம்ஸ் சுன்னாகம்
மனோஜ், நந்திதா, வடிவேலு, காளஸ் நடித்த
ஈரநிலம்
தினசரி காட்சிகள் : 11.00, 2.00, (பு.நே.)
திங்கள் முதல் வியாழன் வரை
THE PEACE KEEPER
இரவு 7.00 (பு.நே.)
(31-16) (C29908)

நிறைஞ்சனாஸ்
அர்ஜுன், மனிஷா நடித்த
முதல்வன்
காட்சி நேரம் : 11.00, 2.15, 6.10 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
ஜாக்சன் நடித்த
LONG KISS GOODNIGHT
(C29913) (31-12-18)

ராஜா யாழ்ப்பாணம்
மாதவன், சிம்ரன் நடித்த
பார்த்தாலே பரவசம்
காட்சி நேரம் 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)


# மரண அறிவித்தல்கள்

## பண்டிதர் முருகேசு சண்முகராசா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

ஏழாலை வடக்கு, கட்டுவன் தெற்கு ஆகிய ஊர்களைச் சார்ந்தவரும் மல்லாகம் இந்துக்கல்லூரி, பண்டாரவளை புனித வளனார் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியப் பணிபுரிந்து ஓய்வுபெற்ற ஆசிரியருமாகிய பண்டிதர் முருகேசு சண்முகராசா அவர்கள் நேற்று (02.09.2003) செவ்வாய்க்கிழமை காலை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - சின்னம்மா தம்பதிகளின் அருந்தவப்புதல்வனும் சின்னையா - முத்தம்மா தம்பதியினரின் அருமை மருமகனும் மகேஸ்வரியின் உயிருக்குயிரான கணவரும் சிவராசா, காலஞ்சென்றவர்களான தம்பியையா, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பாலச்சந்திரன் (கனடா), சந்திரவதனி (மல்லிகா), சந்திரரூபி (றோசா-அமெரிக்கா), சந்திரகலா (நந்திகா-கனடா), பிரேமச்சந்திரன் (அருமை-கனடா), சந்திரபவானி ( முல்லை-கனடா), செல்வச்சந்திரன் (வரன்-கனடா), விநோதச்சந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கௌரி (கனடா), மகேஸ்வரன், சுந்தரலிங்கம் (அமெரிக்கா), சுரேந்திரன் (கனடா), தர்மினி (கனடா), கருணாகரன் (கனடா), விமலாதேவி (கனடா), சகுந்தலா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சபாநிதி, சசிகஜன், கிருஷன், ஸ்ரீராம், நவீன், றோசன், றோசல், துஷான், துஷா, சபிதா, கரஞ்சா, கனிஷ்டா, சகன்யா, சாதனா, சங்கீதா, வரன்யா, சனந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

கட்டுவன், மல்லாகம் நெடுஞ்சாலையில்-கட்டுவன் தெற்கில் அமைந்துள்ள முருகேசம் பதியாகிய அவரது இல்லத்தில் நடைபெறவிருக்கும் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கட்டுவன் தெற்கு,*
*தெல்லிப்பழை.* (22166) (18-16-29)

தகவல்:
ச.விநோதச்சந்திரன்
(மகன்)

## திருமதி சுப்பிரமணியம் செல்லம்மா

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் செல்லம்மா அவர்கள் நேற்று (02.09.2003) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் மல்லிகாதேவி, தவலிங்கம் (மணியம்ஸ் பல்பொருள் உதிரிப்பாகக் களஞ்சியம், இணுவில்), சரோஜினிதேவி, இரத்தினம், புஸ்பவதி, சிவலிங்கம (இத்தாலி), மனோரஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகநாதன், புஸ்பகாந்தி, அரசரத்தினம், பொன்னுத்துரை, காலஞ்சென்ற லால் காந்தீஸ்வரி (இத்தாலி), சற்குணநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ரவிச்சந்திரன், நிர்மலா, வத்சலா (கனடா), பிரியா, நிருன், சுதாகரன் (ஹொலண்ட்), சசிகரன் (பெல்ஜியம்), சுபா, தீபா, சிந்துஜா, மதன், நிசாந்தி, துஸ்யந்தி, நிசாந்தன், தாரணி, சிவதாசன், கௌசல்யா (இத்தாலி), விதுசன், வினோசன், ரம்மியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் உதயசங்கர், உதயநிலக்சன் (கனடா), நிரோசன், நிவேந்தன், தீபிகா (கனடா), ராகவேந்தினி, சிறீராகவி, சிறீகஜன், கஜரூபன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (03.09.2003) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'திருவேரகம்'*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (22177)(18-16-29)

தகவல்:
சு.தவலிங்கம் (மகன்)

## திருமதி கந்தசாமி இராசம்மா

(பிள்ளையார் கோயில், வசாவிளான்)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் கண்டியை வசிப்பிடமாகவும் தற்போது கிளிநொச்சி, ஸ்கந்தபுரத்தில் வசித்துவந்தவருமான திருமதி கந்தசாமி இராசம்மா அவர்கள் 31.08.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும் செந்திமாமாவின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.09.2003 திங்கட்கிழமை கிளிநொச்சி, ஸ்கந்தபுரத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*49/4,யாழ் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (22168) (18-16-29)

தகவல்:
கந்தசாமி அருள்தேவி (மகள்)

## திருமதி கிறேசம்மா வீரசிங்கம்

தொண்டமனாறு Grace Presenceஐப் பிறப்பிடமாகவும் மானிப்பாயில வசித்தவருமான திருமதி கிறேசம்மா வீரசிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (01.09.2003) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி ஜோன் வெற்றிவேலுவின் மகளும் காலஞ்சென்ற போல் வல்லிபுரம் வீரசிங்கம் **(Chief Clerk Allupolla Group,Ratnapura)** அவர்களின் அருமை மனைவியும் அரசிமலர், இன்பமலர் (இளைப்பாறிய ஆசிரியை), Dr.பிலிப் **(Consulton Surgeon Colombo)**, ஜேக்கப் (நமீபியா), டானியல் (பிரதி அதிபா), அமிர்தகளி, டேவிட் (ஜேர்மனி), யோகமலர் (ஜேர்மனி), நளினமலர் (ஜேர்மனி), பிரேமமலர், Dr.ஆபிரகாம் (பகுதி நேர விரிவுரையாளர், லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஞானப்பிரகாசம் (இளைப்பாறிய தபாலதிபர்), காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை (முன்னாள் மக்கள் வங்கி, முகாமையாளர்), றம்யலத்தா, ஞானகுமாரி (நமீபியா), அற்புதமலர் (**Sister tutor**, மட்டக்களப்பு), எஸ்தர் (ஜேர்மனி), நக்லஸ் (ஜேர்மனி), அற்புதானந்தம் (ஜேர்மனி), ஜோர்ஜ் கந்தையா **(Z.O.A.** மட்டக்களப்பு), புஸ்பராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் இன்பக்குமார் (லண்டன்), ரூபி (இலங்கை வங்கி), மேகலா (லண்டன்), ஜீவகரன் (லண்டன்), **Dr**.கௌசலா, **Dr**.குயினி, **Dr**.சிறாணி, பிரேமன் (சென் மைக்கல்ஸ் கல்லூரி, மட்டக்களப்பு), ஜேர்மனியில் வசிப்பவர்களான டானியேலா, மிஷாயெலா, மேசி, ஜெபன், ஜஸ்ரின் ஆகியோரதும் சாமுவேல் நிமலச்சந்திரன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்), கிறேஸ் நிமலதர்சினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரதும் பாசமிகு பேர்த்தியாரும் சாமுவேல், ஈனோக், றோஷேல், செனிறா அஸ்வின் ஆகியோரது பூட்டியும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று (03.09.2003) புதன்கிழமை அமலன் வைத்தியசாலை, உடுவில் வீதி, மானிப்பாயில் மாலை 2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் அச்சுவேலி தென்னிந்திய திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அமலன் வைத்தியசாலை,*
*உடுவில் வீதி,*
*மானிப்பாய்.* (29930) (22-11-16)

தகவல்:
Dr.ஆ.நா.வீரசிங்கம்
(மகன்)

# யாழ். சிறையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது இருசைக்கிள்களையும் கைத் தொலைபேசியையும் உடைத்து சேதப் படுத்தினார் என வணபிதா முறைப் பாட்டில் தெரிவித்திருந்தார்.

இந்த முறைப்பாட்டை அடுத்து யாழ். பொலீஸாரால் கைது செய்யப் பட்ட பிரஸ்தாப இளைஞன் யாழ்.நீதி வான் முன் நேற்று ஆஜர் செய்யப் பட்டார்.

அவர் சார்பில் ஆஜரான சட்டத் தரணி செல்வி சாந்தா அபிமன்ன சிங்கம் அப்போது நீதிமன்றில் தனது வாதத்தை முன்வைத்தார்.

குறிப்பிட்ட மதகுருவுக்கும் இளை ஞனுக்கும் இடையில் முன்பே பகைமை இருந்து வந்தது. அந்தப் பகைமை காரணமாக பொய் முறைப்பாடு ஒன்றை மதகுரு இளைஞனுக்கு எதி ராகச் செய்துள்ளார்.

இந்த மதகுருவின் முறைப்பாடு ஒன்று தொடர்பாக ஏற்கனவே கைது செய்யப்பட்ட பிரஸ்தாப இளைஞன் யாழ். சிறைச்சாலையில் முன்னர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அச்சம யம் சிறைச்சாலை அதிகாரிகளால் அவர் கடுமையாகத் தாக்கப்பட்டிருந் தார்.

அது தொடர்பாக சிறைச்சாலை அத்தியட்சகருக்கும் பிரஸ்தாப மத குருவுக்கும் எதிராக இந்த இளை ஞன் மனித உரிமை ஆணைக்குழு வில் முறைப்பாடு செய்திருந்தார். குறித்த முறைப்பாடு பற்றிய விசார ணைகள் தற்சமயம் இடம்பெற்று வரு கின்றன.

இந்நிலையில், திரும்பவும் பொய் முறைப்பாடு செய்து மீண்டும் சிறைக் குள் தள்ளி அங்கு வைத்து தனது ஆள்கள் மூலம் அவரை இம்சைப்படுத் தவே மதகுரு முனைந்துள்ளார். பிரஸ தாப இளைஞனை சிறைச்சாலைக்கு மீண்டும் அனுப்பினால் அவருக்கு உடல், உயிராபத்து ஏற்படலாம்.

அத்துடன் பிரஸ்தாப மதகுருவு டன் தங்கியுள்ள சிறுவன் ஒருவனின் தந்தை பிரஸ்தாப இளைஞனைப் பலாத்காரமாகப் பிடித்துச் சென்று இயக்கத்தவரிடம் ஒப்படைத்துள்ளார் - என்று சட்டத்தரணி தெரிவித்தார்.

இந்நிலையில், நீதிவானின் பணிப்பின் பேரில் பிரஸ்தாப மதகுரு மற்றும் அவருடன் தங்கியுள்ள சிறு வன், தேவாலயத்தில் பணிபுரியும் இளம் பெண் ஆகியோர் நீதிமன்றத் தில் பொலீஸாரால் முற்படுத்தப்பட்டனர்.

பிரஸ்தாப மதகுருவின் வாக்கு மூலத்தைப் பதிவுசெய்த நீதிவான், மதகுருவுடன் தங்கியுள்ள சிறுவனின தந்தையிடம் இருந்து வாக்குமூலத் தைப் பெற்று இன்று நீதிமன்றத்தில் அவரை ஆஜர்செய்யும்படி உத்தரவிட் டார்.

குறிப்பிட்ட இளைஞரை யாழ். சிறையில் தடுத்து வைப்பது, அவ ருக்கு உயிராபத்தை ஏற்படுத்தலாம் என்று சட்டத்தரணி சமர்ப்பித்த வாதத்தை ஏற்றுக்கொண்டு இளை ஞனைப் பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்து இன்று வரை விசார ணையை ஒத்திவைத்தார். (ஒ-3)

# பெண் மீது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்டார்.

பிரஸ்தாப சிப்பாயை அடையாள அணிவகுப்புக்கு நேற்று மாலை உட் படுத்திய சமயம் பிரஸ்தாப பெண் சிப்பாயை அடையாளம் காட்டினார்.

மேலதிக விசாரணைக்காக பொல ஸார் பிரஸ்தாப சிப்பாயைக் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.

(ஒ-3-164)

# புலிகளின் பரீஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவையில் அமைச்சர்கள பலர் எனக்கு எதிராகக் குற்றங்களைச் சுமத்துகின்றபோதும், நான் மௌன மாகவே இருக்கின்றேன். தக்கதரு ணம் வரும்போது நான் எனது நிறை வேற்று அதிகாரத்தைப் பயன்படுத்து வேன். அதிகாரப் பரவலாக்கம் தொடர் பாக ஜே.வி.பி. எதிர்ப்புத் தெரிவித்து வரும் போதிலும, பொ.ஐ.மு. அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# ஐ.நா.சபையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுகோளை ஐ.நா. சபைக்கு அனுப்பி வைத்துள்ளார். ஜனாதிபதிக் கும், அரசுக்கும் இடையிலான அரசி யல் முறுகல் நிலையை சர்வதேச சமூகத்துக்கு முன்கொண்டு செல்லக் கூடாது என்பதற்காக ஐ.நா. சபை யில் இடம்பெறவுள்ள குறிப்பிட்ட அமர் விலிருந்து விலகிக்கொள்ள நான் தீர மானித்துள்ளேன். ஐ.நா. சபைக்கு தமது வேண்டுகோளை அனுப்புவது தொடர் பாக வெளிவிவகார அமைச்சுக்கு ஜனாதிபதி எவ்விதத் தகவல்களை யும் வழங்கவில்லை.

இப்படி அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் ஊடகப் பேச்சா ளர் ஹரீம் பீரிஸ் இது பற்றிக் கூறுகை யில்:-

புலிகளுடன் அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டபோதும், அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அரசு அகற்றியபோதும் அரசு, ஜனாதி பதியுடன் கலந்தாலோசிக்கவில்லை. இவற்றோடு ஒப்பிடும் போது இந்த விடயம் பெரிதானதொன்றல்ல என்றும - வெளிவிவகார அமைச்சின் அதி காரிகளினூடாகவே தமது கோரிக் கையை ஜனாதிபதி ஐ.நாவுக்கு அனுப்பியிருந்தார். இது வெளிவிவ கார அமைச்சருக்குத் தெரியாமல் இருப் பது என்பது அமைச்சின் நிர்வாக சீரின்மையையே காட்டுகிறது என்றும - அவர் தெரிவித்தார்.

(ஒ)

# புலிகளின் திட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்கியுள்ளோம்.

இந்த விவகாரம் தொடர்பான கலந் துரையாடல்களில் சர்வதேச அளவில மிகவும் அநுபவம் பெற்ற - ஆற்றல் பெற்ற - எமது தமிழ் அறிஞர்கள் கலந்துகொண்டமை மிகவும் ஆக்க பூர்வமானதாக இருந்தது.

நாங்கள் உருவாக்கியுள்ள இந்த திட்ட வரைவை தலைவரிடம் சமர்ப் பித்து பரிசீலித்து நோர்வே தரப்பி னூடாக அதனை ஸ்ரீலங்கா அரசுக்கு அனுப்பவுள்ளோம்.

சர்வதேச ரீதியாக இணைப்பிணக்கு கள், போர் நடந்த பிரதேசங்களில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் கள் எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளன. அவற்றினுடைய அதிகாரங்கள் எப்படி அமைந்தன. அதனால் மக்கள் அடைந்த நன்மைகள் போன்றவை தொடர்பாக சர்வதேச ரீதியான பட்ட றிவை எமது பரிசீலனைக்கு உட் படுத்தி, சர்வதேச அளவில் அங்கீக ரிக்கக் கூடியவாறு நாங்கள் இந்த இடைக்கால நிர்வாகத் திட்ட வரைவை உருவாக்கியுள்ளோம்.

இலங்கைத்தீவில் அமைதியையும் சமாதானத்தையும் கொண்டுவருவதற்கு அடித்தளமாக அமையப்போகும் இந்த இடைக்கால நிர்வாக கட்டமைப்பை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டு ஒத்து ழைக்கும் என நாம் நம்புகிறோம் - என்றார் அவர்.

(ஒ-3-5-9)

# கொழும்பு - இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொன்னார்.

அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டி லேயே அமைச்சர் இத்தகவல்களைத் தெரிவித்தார்.

அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பயனாக உல் லாசப் பிரயாணத்துறையில் ஏற்பட்ட அபிவிருத்திகள் குறித்து செய்தியா ளர்களுக்கு அமைச்சர் விளக்கிக் கூறினார்.

இந்த செய்தியாளர் மாநாட்டில் உல்லாசப் பிரயாணத்துறை அமைச் சர் காமினி லொக்குகேயும் அபிவிருத தித் திட்டங்கள் தொடர்பாக விளக்க மளித்தார்.

அண்டை நாடான இந்தியாவில் இருந்து உல்லாசப் பிரயாணிகளின் வருகை அதிகரித்துள்ளது என்று அமைச்சர் பீரிஸ் கூறினார். அப் பொழுது கொழும்புக்கும் தூத்துக்குடிக் கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை தமிழக முதல்வர் ஜெயலலி தாவின் எதிர்ப்பினால் கைவிடப் பட்டுள்ளதே. இது பற்றி என்ன கூறு கின்றீர்கள்? என்று செய்தியாளர்கள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினர்.

இக்கேள்விக்கு அமைச்சர் பீரிஸ் பதிலளிக்கையில், தூத்துக்குடித் திட் டம் பற்றி சில தப்பபிப்பிராயங்களி னால் தமிழக முதல்வர் எதிர்ப்பு தெரி வித்திருக்கிறார். இது ஓர் இடைக் கால தேக்கம்தான். திட்டம்கைவிடப் படவில்லை. என்றாலும், கொழும்புக் கும் கொச்சினுக்கும் இடையில் பய ணிகள் கப்பல் சேவை ஒன்றை ஆரம் பிப்பது தொடர்பாக இரு அரசுகளுக் கும் இடையில் பேச்சுகள் நடைபெறு கின்றன. கூடிய விரைவில் கொழும்பு - கொச்சின் பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என்றார்.

(மற்றொருசெய்தி 5 ஆம் பக்கத்தில்)


**NEW SCIENCE COLLEGE**

கன்னாதிட்டி- யாழ் நகர்.

LOGIC

திரு. S.R.J.சுதன்

**A/L DAY**

இன்று(3/9) ஆரம்பம்:

புதன் 10a.m.

(ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்)

(22141)

**கணனி ரைப் செற்றிங் பயிற்சி வகுப்புகள்**

பிராந்திய நேர அட்டவணை ஒழுங்குபடுத்தித்தரப்படும்.

ஆரம்பம்:

03.09.2003 4p.m.

திகழ் கல்வி நிறுவனம்

K.K.S. வீதி, இணுவில்.

(22147)

**கிறிஸ்ரல் சென்ரர்**

நெல்லியடி

**A/L DAY CLASS**

கலை, வர்த்தகம்

பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன.

வணிகக்கல்வி

B.S. பசில்

ஆரம்பம்: 03.09.2003

நண்பகல் 12.00

வணிகப் புள்ளி விபரவியல்

தவசேகர்

ஆரம்பம் : 04.09.2003 வியாழன்

மாலை 4 மணி.

(சி-29952)

**SUBRA**

சித்தன்கேணி

O/L PAPER CLASS

ஆரம்பம்: 01.09.2003

தினமும் மாலை- 5.30- 7.00

தினமும் காலை- 6.00- 7.00

★ அனுமதிக் கட்டணம் மட்டுமே அறவிடப்படும்.

★ கடந்தகால மாணவரின் பெறு பேறு எமது திறமையின் வெளிப்பாடு.

★ அனுமதிகள் வரையறுக்கப் பட்டவை.

(சி-29931)

15,000/- இலிருந்து கணனிகள் விற்பனைக்கு



Pentium I, II, III

தரமான கணனிகளையும் கணனி உதிரிப்பாகங்களையும் மலிவு விலையில் உங்கள் பட்ஜெட்டுக்குள் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு நிறுவனம் SUN

SUN COMPUTERS
No. 316, Hospital Road. Jaffna.
Tel. 222 5208

(C29892) (32)

**இந்திய சாஸ்திரியார் வருகை**



முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்

பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற

S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.

(காலை 8 மணிமுதல் மாலை 8மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்

இல. 711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

T.P. : 077-6080660, 021-2226188.

(யாழ்-இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)

(21933)(31-16)

New Batches

Start on 06.09.2003 at 10.00 a.m.

Diploma in Engineering Drawing & AutoCAD

பொறியியற் பீடத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான விசேட கணனிக்கற்கை நெறி

Diploma in C++ Programming

பௌதிகவியல், பௌதிகவியல் பீடத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான விசேட கணனிக்கற்கை நெறி

Diploma in Information Technology

முகாமைத்துவ, வணிக, கலை பீடத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான விசேட கணனிக்கற்கை நெறி

மேலதிக விவரங்களுக்கு :

இயக்குநர்,

IIS யாழ்ப்பாணம்.

(சி-29893) (12-17)

ஒறிஜினல் யப்பான் NTN போல் பியறிங், றோலர் பியறிங் (றேசர் வகைகள்)

யாழ். நகரில் பெற்றுக்கொள்ள ஒரே இடம்

கே.வைத்தியலிங்கம் சக நிறுவனம்

38,40, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்.

NTN BEARINGS

NTN corporation

ஏக இறக்குமதியாளர்கள் :

கொன்சலிடேற்ரட் பியறிங் அன் சப்பிளை லிமிடெட்

இல. 29, பிறிஸ்டல் வீதி,

கொழும்பு - 01.

**நிர்வாக அலுவலர் தேவை**

எமது வன்னி/கிளிநொச்சி பிராந்திய காரியாலயத்துக்கு நிர்வாக அலுவலர் ஒருவர் தேவை. அவர் பின்வரும் தகைமைகளும் உடையவராக இருத்தல் விரும்பத்தக்கது.

1. வயது :40 இற்கு மேல்
2. முன்னனுபவம் : நிர்வாகத்திறனும், பத்திரிகை விநியோகத்துறையில் முன்னனுபவமும்.
3. வசிப்பிடம் : கிளிநொச்சியில் குடியிருப்பவராகவும் கிளி/முல்லை/வன்னி/மன்னார் மாவட்டத்தை நன்கு அறிந்தவராயும் இருத்தல்.
4. சம்பளம் : பேசித்தீர்மானிக்கலாம்.

தகைமையுடையவர்கள் : தமது சொந்த கையெழுத்தில் எழுதிய விண்ணப்பத்தை இம்மாதம் 8 ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கும் படியாக கீழ்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மனிதவள முகாமையாளர்

உதயன் மனிதவள சேவை

361, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

(சி-29938)





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அலுவலகத்தில் 03.09.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.